ஆரம்பம் 1969 பெப்ரவரி

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

அறிவோம்.. அறிவிப்போம்...

சமய – சமூக – இலக்கிய வெளியீடு







பெப்ரவரி – 2022

50/=









# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் – 1969 பெப்ரவரி

மலர் – 53 இதழ் – 03

பெப்ரவரி – 2022

ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிகஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


| | |
|---|---|
| மகிழ்ந்திடாய் மாநிலமே | 02 |
| மாணவர் பக்கம் | 05 |
| ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவை | 06 |
| பார்வைகள் பலவிதம் | 08 |
| அந்தக் குருவை | 09 |
| ஒரு வெண்மணற் கிராமம் | 10 |
| கடுகுக் கதை | 13 |
| திறமைதான் நமது செல்வம் | 14 |
| சோதனை தரும் போதனை | 15 |
| அன்பெனும் சுடராய் | 16 |
| இலக்கிய மஞ்சரி | 18 |
| தொப்பையைக் | 20 |
| திருஅவைச் செய்திகள் | 21 |
| கனவுலகவாசிகள் | 22 |
| இனியது இயற்கை | 23 |
| நலம் பெறுவீர் | 24 |
| அதர்மத்தோடு நாங்கள் | 25 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| போட்டி முடிவுகள் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ–ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

*ஆடம்பர திருவிழாவா...? அல்லது*
*ஆன்மீகத் திருவிழாவா...?*

**அன்புமிக்க சகோதரங்களே!**

இன்று எல்லா மதங்களிலும், பெருநாள்களும் ஆலய திருவிழாக்களும் முக்கிய பங்குகளை வகிக்கின்றன. ஒரு ஆலயத் திருவிழா என்றால் அது ஊருக்கே கொண்டாட்டம் எனலாம். கொடிகளை மேலே ஏற்றி திருவிழாக்களை ஆரம்பிக்கின்றோம். இறுதிநாள் வழிபாட்டுடனும் கொடி இறக்கத்துடனும் திருவிழாக்கள் நிறைவுபெறுகின்றன.

திருவிழாக் காலங்களிலும் சரி அதற்கு முற்பட்ட காலங்களிலும் சரி எமது ஆயத்தங்கள் எப்படி இருக்கின்றன என்பதை சிந்திக்கவும், எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை உணர்ந்து செயற்படவும் சில கருத்துகளை முன்வைக்க நினைக்கிறேன்.

ஆலய திருவிழாக்களின் வரலாற்றை நாம் நோக்கினால் எமது மண்ணிலே திருச்சபைகள் நிறுவப்பட்டு வளர்ச்சியடைந்த காலங்களில் அதிக எண்ணிக்கையில் குருக்கள் இருக்கவில்லை. போர்த்துக்கேயருடைய காலத்திற்குப் பின் பல இடங்களுக்கும் காட்டு வழியிலே கால்நடையாகச் சென்று திருச்சபையை நிறுவி விசுவாசத்தை வளர்த்தெடுத்தார்கள் புனித யோசேவ்வாஸ் போன்ற அருட்தந்தையர்கள். ஓரிரு குருக்கள் மாத்திரம் பணியாற்றிய காலங்களில் இவர்கள் திருச்சபையை நிறுவிவிட்டு வேறு இடத்திற்கும் சென்று விசுவாசத்தை வளர்த்தெடுத்து மக்களை இறை உறவில் ஆயத்தப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்த அருட்தந்தையர்கள் வருடத்திற்கு ஒரு முறை மாத்திரமே தாங்கள் நிறுவிய திருச்சபையைத் தரிசிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றார்கள். இவ்வாறு அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒருமுறையோ அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட காலத்தில் ஒரு திருச்சபையைத் தரிசிக்க ஓர் இடத்திற்கு ஒரு குருவானவர் வரும்போது அவர் அவ்வூரிலேயே அமையப் பெற்றிருக்கும் ஆலயத்தின் முகப்பிலே கொடியை ஏற்றுவார். இந்த கொடி குருவானவர் வந்திருக்கின்றார் என்பதன் அடையாளமாய் இருக்கும். இக்கொடியைக் காணும் இறைமக்கள் தங்களுடைய வீட்டை விட்டு வந்து ஆலயத்தைச் சுற்றி கொட்டில்கள் அமைத்து அங்கே தங்குவார்கள். குருவானவர் 10 நாட்கள் அவர்களோடு தங்குவார். இந்த நாட்கள் அவர்களுக்கு திருவிழாவாக அமையும். அக்குருவானவர் அவர்களோடு தங்கி அருட்சாதனங்களை வழங்கி அவர்களது ஆன்மீக தேவைகளை நிறைவேற்றி விசுவாசத்தில் உறுதிப்படுத்துவார். 10வது நாள் திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுத்து கொடிகளை இறக்கி மீண்டும் அவர் வேறு ஓர் இடத்திற்குச் சென்றுவிடுவார்.

இவ்வாறுதான் ஆரம்பத்திலே திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன. ஆன்மீகத்தையும் விசுவாசத்தின் உறுதிப்பாட்டையும் அடிப்படையாக வைத்தே திருவிழாக்கள் ஆயத்தப்படுத்தப்பட்டன. காலம் செல்லச் செல்ல விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்க ஆலயங்களின் எண்ணிக்கையும் வளர்ச்சி கண்டது. பல இளைஞர் யுவதிகளும் இறைபணிக்கு தங்களை அர்ப்பணிக்க சுதேச குருக்கள் துறவறசபை குருக்கள் என குருக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. திருவிழாக்களும் வித்தியாசமான பரிமானத்தை எட்டியது.

இன்று இந்த நவீன யுகத்திலே தொழில்நுட்ப விஞ்ஞான உலகின் வளர்ச்சி, போட்டி மனப்பான்மைகள் மற்றும் மனித சிந்தனையிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் யாவும் எமது திருவிழாக்களிலும் செல்வாக்கு செலுத்துவதை நாம் காணலாம். இதனால் இன்று திருவிழாக்கள் ஆன்மீக திருவிழாவா? அல்லது ஆடம்பர திருவிழாவா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. ஆடம்பர உள், வெளி அலங்காரங்கள் இல்லாமல் திருவிழாக்கள் இல்லை. பட்டாசு வானவேடிக்கைகள் இல்லாமல் திருவிழாக்கள் இல்லை. அன்னதானம் இல்லாமல் திருவிழாக்கள் இல்லை. ஊர்வலங்கள் இல்லாமல் திருவிழாக்கள் இல்லை. புது ஆடைகள் இல்லாமல் திருவிழாக்கள் இல்லை என்றாகிவிட்டது. இதிலே இன்னும் கவலையை ஏற்படுத்தக்கூடிய விடயம் யாதெனில் இவ்வாறான ஆடம்பர ஆயத்தங்களை மேற்கொள்பவர்கள் நவநாட் திருப்பலிகளிலும், திருவிழா திருப்பலிகளிலும் கலந்துகொள்வதில்லை. திருவிழாவிற்கு ஆயத்தமாக நம்மில் எத்தனை பேர் நல்ல பாவசங்கீத்தனம் எடுக்கிறோம்.

எப்படிப்பட்ட ஆயத்தம் மற்றும் பங்கேற்றல் எமக்கு உண்மையான இறையாசீரைப் பெற்றுக்கொடுக்கும் என்பதை இன்று நாம் சிந்திக்க வேண்டும். வழிபாடுகளிலும், ஜெபங்களிலும் கலந்துகொள்ளாமல் ஆலய வேலைகளில் நாம் ஈடுபாட்டுடன் இருப்பது மாத்திரம் திருப்தியைக் கொடுப்பதாக எண்ணிவிடலாம். ஆனால் அவை ஆன்மாவிற்கு ஈடேற்றம் தரமுடியாது. ஆகவே ஆன்மீக ஆயத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து, இறைவனுடைய ஆசீர் எம் பங்கின் பாதுகாவலர் வழியாக எமது குடும்பங்களுக்கும் பங்கிற்கும் கிடைக்க திருவிழா வழிபாடுகளில் மனசாட்சியுடன் கலந்துகொள்வோம்.

**"உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன்; நீங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை. எரிபலிகளையும் தானியப் படையல்களையும் எனக்கு நீங்கள் செலுத்தினாலும் நான் ஏற்க மாட்டேன்; கொழுத்த விலங்குகளை நல்லுறவுப் பலிகளாகச் செலுத்தும்போது நான் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன்."**

- ஆசிரியர் -

# மகிழ்ந்திடாய் மாநிலமே!





- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



**“இ**ம்மாதம் எமது மறைமாவட்டத்தில் உன்னதமான நிகழ்வொன்றிற்காக நாம் ஒட்டு மொத்தமாகப் பல கோணங்களில் இருந்து எம்மையே தயாரித்துக்கொண்டிருக்கும் இவ் வேளையிலே அதன் மகத்துவத்தைப் பற்றி சிந்திப் பது பொருத்தமானது எனக் கருதி இம்மடலில் குருத்துவத்தைப் பற்றி உங்களோடு கலந்துரை யாட விளைகிறேன். இம்மாதம் 26ம் திகதி மண்ணின் மைந்தர் மூவர் எமது மறைமாநிலத்தில் குருக்களாக திருநிலைப்படுத்தப்படுவர். கடந்த நான்கு வருடங்களாக புதிதாக யாருமே குருக்க ளாகத் திருநிலைப்படுத்தப்படவில்லை. ஒருவகை யான வரண்ட பாலைநில அனுபவத்தை உணரக் கூடியதாக இருந்தது.

ஒரு கிறிஸ்தவனின் முக்கியமான பணி என்ன? ஒன்று கடவுளை மக்களிடம் கொண்டு வருவது. இரண்டு, மக்களை கடவுளிடம் கொண்டு வருவது. கடவுளை மக்களிடம் கொண்டு வந்தவர் இயேசு கிறிஸ்து. கடவுளது வல்லமையைப் பெற்று, அவரது ஆற்றலைத் தனக்குள் உள்வாங்கி அவற்றை மக்களோடு பகிர்ந்து கொண்ட தன் மூலம் கடவுளை மக்களிடம் கொண்டு வந்தார். அடுத்து மக்களை இறைவனிடம் கொண்டு வந்தார். இறைவனையும் மக்களையும் சந்திக்கச் செய்கின்றபோது, இந்த உலகத்தில் ஏராளமான மாற்றங்கள் நிகழ ஆரம்பிக்கின்றன. இந்த உலகம் சுபிட்சமாக மாற ஆரம்பிக்கின்றது.

இந்த இரண்டையும் ஒருசேர தம் சிலுவையில் சந்திக்கச் செய்கிறவர் தான் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.

இந்திய மரபில் “யாத்திரை மந்திரம்” என்ற புகழ்பெற்ற செபம் ஒன்று உண்டு.

“இறைவா!!
இருளிலிருந்து ஒளிக்கும்
பொய்ம்மையிலிருந்து மெய்மைக்கும்
சாவிலிருந்து வாழ்விற்கும்
என்னை அழைத்துச் செல்வாய்”
என்பதே அம்மந்திரம்.

ஒட்டுமொத்த மனித குலத்தையே எதிர்மறை யான சூழலிலிருந்து (இருள், பொய்மை, சாவு) நேர்மையான சூழலுக்கு (ஒளி, மெய்மை, வாழ்வு) அழைத்துச் செல்லப் பிறந்தவர்தான் இயேசு கிறிஸ்து. இதையே “காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டனர் சாவின் நிழல் சூழ்ந்த நாட்டில் குடியிருப்போர் மேல், சுடரொளி உதித்துள்ளது” (எசாயா 9:2) என்ற வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

இறைமகன் இயேசு ஒட்டுமொத்த மனித குலத்தையே ஒளியை நோக்கி நடத்திச் செல்ல விரும்பினாலும், நம் ஒத்துழைப்பு இன்றி இது சாத்தியமற்றது. நாம் மனம் மாறாதவரை அவர் கொண்டுவரும் ஒளியையும் வாழ்வையும் நமதாக்க முடியாது. எனவேதான் “மனம் மாறுங்கள்” என்று அறைகூவல் விடுக்கின்றார். மனமாற்றம் என்பது ஒருசில பாவங்களை விட்டுவிட முயற்சி

எடுப்பதல்ல. மாறாக ஒட்டுமொத்த வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவது புதிய வழியில் வாழ்க்கையை அமைத்துக்கொள்வது புதிய மன நிலையோடு ஒட்டு மொத்த வாழ்வை அணுகுவது.

ஐக்கிய நாடு பொதுச் செயலாளராக 1953 முதல் 1961 வரை பணி செய்த Dag Hjalmar Agne Carl என்பவர் எழுதி வைத்த குறிப்பேட்டில் ஒரு பகுதி இப்படியாக இருந்தது:

இறைவா!
உம் பெயர் புகழப்படுவதாக!
என் பெயர் அல்ல:
உம் அரசு வருக! என் அரசு அல்ல்
உம் விருப்பம் செய்யப்படுவதாக!
என் விருப்பமல்ல;

நாள்தோறும் நாம் சொல்லும் கர்த்தர் கற்பித்த செபத்தில், இறைவனின் அரசு வருக; அவரது விருப்பம் செயல்படுத்தப்படுவதாக! என்று மன முருக வேண்டினாலும் நாம் உழைப்பது என்னவோ நம் விருப்பத்திற்காகவும், நம் பெயருக்காகவும், நம் அரசுக்காகவும்தான். இதுவே எல்லாப் பிரச்சினைக்கும் காரணமாகவும், ஊற்றாகவும் இருக்கிறது".

## அருட்பணி வாழ்வின் அடையாளம் – நற்கருணை

இயேசு தம் பணி தொடர பலரையும் அழைத்தார். தாம் விரும்பியவர்களை அழைத்தார். அழைப்பில் அவர் பாகுபாடு காட்டவில்லை. இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவின்போது இறுதியுணவு அருந்துகையில் அப்பத்தை எடுத்து, இறைபுகழ் கூறி, பிட்டு, தம் சீடர்களுக்கு அளித்து, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அவ்வாறே கிண்ணத்தையும் எடுத்து, சீடர்களுக்கு வழங்கி, "இது பாவமன்னிப்புக்காகச் சிந்தப்பட்ட என் இரத்தத்தின் சின்னம்" என்று கூறினார். (1 கொரி 11:23-29).

அந்த இரவைத்தான் நாம் நற்கருணை அடையாளம் நிறுவப்பட்ட புனித இரவாகக் கொண்டாடுகிறோம். அதுவே குருத்துவம் என்ற புனிதமிக்க திருப்பணி ஏற்படுத்தப்பட்ட இரவாகவும் கருதப்படுகிறது. ஆகவே, நற்கருணையும் குருத்துவமும் பிரிக்க முடியாத, ஒன்றில் மற்றொன்று பின்னிப் பிணைந்த மறைபொருட்களாகவும் அருளடையாளங்களாகவும் உள்ளன. தம்மால் படைக்கப்பட்ட மனிதர்களை, அதிலும் உலகம் மடமை எனவும், வலுவற்றவர் எனவும் கருதுகின்ற தகுதியற்ற அடியோரை அருட்பணியாளர்களாகத் தேர்ந்துகொண்டு அவர்களை அருட்பொழிவு செய்து, அவர்களின் பலவீனங்களையும் குறைகளையும் பெரிதுபடுத்தாது "தாம் விடுத்த அழைப்பையும், கொடுத்த அருளையும் திரும்பப் பெற்றுக் கொள்ளாமல் ....," (காண்க. உரோ 11:29) நம்பிக்கைக்குரியவராய் இறுதிவரை இருந்து, குருவானவர் உச்சரிக்கின்ற வசீகர வார்த்தைகளுக்கு இணங்கி, ஆவியாரின் வல்லமையால், அவர் அர்ப்பணமாக்கும் அப்பத்திலும் இரசத்திலும், உயிருள்ள உடலாகவும் இரத்தமாகவும் வருகிறார் என்றால், அதிலேதான் இறைவனின் எல்லையற்ற அன்பும், அருட்பணி வாழ்வின் விவரிக்க முடியாத அழகும் அடங்கியுள்ளன.

## ஆன்மீகத்தின் விழிப்புணர்வு

"ஒருவர் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழப்பாராயின் அதனால் வரும் பயன் என்ன?" (மத். 16:26) என்ற இறைவார்த்தை வரிகள் இளைஞன் பிரான்சிஸ்கு சவேரியாரை விழித்துக்கொள்ளச் செய்தன. இன்றும் அருட்பணியாளர்கள் விழித்துக்கொள்ள வேண்டிய கட்டாயச் சூழல் உள்ளது. பொதுவாக, சமூக அவலங்களைக் கண்டு, மக்களுக்கு இழைக்கப்படும் சமூக அவலங்களைக் கண்டு, அரசியல் சூழ்ச்சிகளைக் கண்டு விழித்துக்கொள்ள வேண்டும் என்றே அறிவுறுத்தப்படுவதுண்டு. ஆனால் அவற்றையும் கடந்து, நாம் நமக்குள் விழித்துக்கொள்ள வேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் நமது புனிதத்திற்கு விழித்துக்கொள்ள வேண்டும்.

## புனித வாழ்வு

"காலையில் இறைபுகழ் பாடி துயில் எழல், உடலைப் பேணுதல், கட்டளைச் செபங்களைச் செபித்தல், திருப்பலிக்குத் தயாரித்தல், இறைவார்த்தையைத் தியானித்தல், பக்தியோடும் சிதறாத, பதறாத கவனத்தோடும் திருப்பலி நிறைவேற்றுதல், இறைமக்களின் தேவைகளுக்குத் தன்னையே தயாராக வைத்துக்கொள்ளல், நேரத்தைப் பிறருக்காகச் செலவு செய்தல்,

அன்போடு பழகுதல், கரிசனையோடு நடத்தல், வறியோருக்கு இரங்குதல், இரக்கம் காட்டுதல், பாவத்திற்கு அஞ்சுதல், புனிதத்தையே நாடுதல், இறையன்னையின் பரிந்துரையை அன்றாடம் நாடி செபித்தல்" போன்றவை நாள்தோறும் ஒவ்வோர் அருட்பணியாளரும் ஆற்ற வேண்டிய ஆன்மீகக் கடமைகளாகும். இவற்றைக் கட்டாயமாகவும் கடமையாகவும் பார்க்காமல், தத்தம் அருட்பணி வாழ்வை மெருகேற்றுகின்ற வழியாகவே கருத வேண்டும்.

"புனிதம் என்பது யாரோ ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பு அழைப்பு அல்ல் மாறாக திருமுழுக்குப்பெற்ற அனைவருக்குமே இறைவன் தருகின்ற இயற்கையான அழைப்பு" என்று திருத் தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார் என்றால் அருட் பணியாளர்கள் வாழ்ந்துகாட்டவேண்டிய புனித வாழ்வு எவ்வளவு இன்றியமையாதது! 'நன்றாகப் பாட வேண்டும், நன்றாக மறையுரை ஆற்ற வேண் டும், நன்றாக நிர்வகிக்க வேண்டும், நன்றாகப் பேச வேண்டும், நன்றாக சூழ்நிலைகளைக் கையாள வேண்டும்' என்பன போன்ற தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்கிறோமே தவிர, 'நன்றாக செபிக்க வேண்டும், நல்ல குருவாக வாழ வேண்டும், புனிதத்தில் வளர வேண்டும்' என்ற சிந்தனைகளை நமது உயிர் மூச்சாக மாற்றுவதில்லை. நம்மைத் தலைவர்களாகவும், நிர்வாகிகளாகவும், ஆசிரியர்களாகவும், அலுவலர் களாகவும் பார்ப்பதை விட நல்ல பக்தியுள்ள புனித குருக்களாகவே அனைவரும் பார்க்க விரும்புகிறார்கள்.

இந்தப் புனிதத்தை நமக்குத் தந்து, புனித வாழ்வுக்கான ஆவலையும், தாகத்தையும் நம்மில் தூண்டுபவர் யார்? அன்றாடம் நாம் நிறைவேற்றும் திருப்பலிகள் வழியாக உயிருடன் நம் மத்தியில் பிரசன்னமாகும் நற்கருணைநாதரே நம் புனித வாழ்வுக்கான அளவுகோல் ஆவார். உள்ளத்தில் கறையோடு, சிந்தனையில் தீவினையோடு, ஆன்மாவில் பாவத்தோடு அவரது பலிபீடத்தை அணுகுவது நமக்கு அச்சத்தையும், கலக்கத்தையும் உருவாக்க வேண்டும். "ஒரு குருவானவர் தம்மு டைய புனித வாழ்வுக்கான கனாகனத்தை உணர்ந்துகொண்டார் என்றால் அவர் உண்மையில் இறந்து போவார்" என்று புனித ஜான் மரிய வியான்னி கூறுகிறார். ஆண்டவர் இயேசுவை நம் கரங்களில் ஏந்தவதற்கு நாம் தூய்மையை அன்றாடம் அணிந்துகொள்ள வேண்டும். நாம் ஏதோ நேரத்திற்கு ஏற்றாற்போல் குருவானவர்கள் அல்ல் மாறாக 24 மணி நேரமும் குருவானவரே! நமக்குத் தனி வாழ்க்கையும், பொது வாழ்க்கையும் வெவ்வேறாக இருத்தலாகாது.

இப்படிப்பட்ட புனித வாழ்க்கையை வாழ்வ தற்கு ஒவ்வொரு குருவும் சிலுவைகளைச் சுமக்க வேண்டும். உடல், உள்ள, ஆன்ம ஒறுத்தல்களை அன்றாடம் மேற்கொள்ள வேண்டும். குருத்துவ அருட்பொழிவின்போது திருத்தொண்டருக்கு அணிவிக்கப்படும் திருவுடையானது, அடிப்படையில் அவர் இனி நிரந்தரமாக இயேசுவின் சிலுவையைத் தன் தோளில் சுமந்து கொள்கிறார் என்பதுதான் உண்மை. இந்த உலகம் அருட்பணியாளர்களை உற்று நோக்குகின்றது. காரணம் என்னவென்றால், அது இயேசுவை உற்று நோக்குகின்றது. யாரும் கிறிஸ்துவைக் காண முடியாது. ஆனால் எல்லோ ரும் ஒரு குருவானவரைக் காணலாம். அவர் வழியாக இவ்வுலகம் கிறிஸ்துவின் சாயலைக் கண்டுகொள்கிறது.

"ஓ இறைவனின் புனித குருவே!
நீர் நிறைவேற்றும் இப்பலியை
உம் முதல் பலி எனவும்
இறுதிப் பலி எனவும்
ஒரே பலி எனவும் நிறைவீற்றுவீராக!

**- புனித அன்னை தெரேசா -**

"மன்னன் நீதிவழங்கும் இருக்கையில் வீற்றிருக்கும்போது, தன் பார்வையாலேயே தீமையான யாவற்றையும் சலித்துப் பிரித்துவிடுவான்"

**- நீதிமொழிகள் 20: 8**

"பொய்யான எடைக் கற்களையும் பொய்யான அளவைகளையும் பயன் படுத்துகிறவரை ஆண்டவர் அருவருக்கின்றார்."

**- நீதிமொழிகள் 20 : 10**

"மனிதனுடைய வாழ்க்கைப் பாதையை ஆண்டவர் அமைக்கின்றார் அப்ப- டியிருக்க, தன் வழியை மனிதனால் எப்படி அறிய இயலும்?"

**- நீதிமொழிகள் 20 : 21**



கிறிஸ்தவம்

க.பொ.த உயர்தரம்

# மாணவர் பக்கம்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

**தொடர்** XII

- நில்மினி கஜேந்திரன்

**மாணவர் பக்கம்**

ஜனவரி 2022

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 3 | 5) 1 | 9) 4 |
| 2) 1 | 6) 3 | |
| 3) 3 | 7) 3 | |
| 4) 1 | 8) 1 | |

**1. படைப்பாக விளங்குகின்ற மனிதன் படைப்பாளரான இறைவனுக்குரிய அதிகாரத்தை தான் பெற்றுக்கொள்ள எடுக்கின்ற பிரயத்தனத்தைக் குறிப்பது:**

1. தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டது
2. நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை உண்ணுதல்
3. இறைசித்தத்திற்கு கீழ்ப்படிந்தது
4. ஆதாமுக்கு துணையாக ஏவாள் படைக்கப்பட்டது
5. இருவரும் பாம்பின் கதையைக் கேளாதிருந்தது

**2. யாவே பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு கி.மு. 10ம் நூற்றாண்டில் தோன்றிய கதை எது?**

1. இறைவன் மனிதனைப் படைத்தது 2. மனிதன் பாவத்தில் வீழ்ந்தது
3. ஆதாமை இறைவன் அழைத்தது 4. ஆபிரகாமுடன் உடன்படிக்கை
5. லோத்தைக் காப்பாற்றியது

**3. கானானியர் காலத்தில் ‘அஷேரா” தேவதை எதன் அடையாளமாய்ச் சித்தரிக்கப்பட்டாள்?**

1. இரக்கத்தின் அடையாளம் 2. காமத்தின் தேவதை
3. அமைதியின் அடையாளம் 4. உதவியின் அடையாளம் 5. அழகின் அடையாளம்

**4. மீட்பு வரலாற்றின் ஆரம்பகாலத்தில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் எவ்வாறழைக்கப்படுவர்?**

1. குலமுதுவர்கள் 2. ஆளுநர்கள் 3. அரசர்கள்
4. பிரிவினைவாதிகள் 5. பிரதானிகள்

**5. குலமுதுவர்களுக்குரிய காலமாய்க் கருதப்படுவது.**

1. கி.மு. 900 - கி.பி. 850 2. கி.மு. 2000 - 1700 3. கி.மு. 1000 - 900
4. கி.மு. 800 - 500 5. கி.மு. 1500 - 1000

**6. ஆபிரகாம் காரான் தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு சென்றது.**

1. தனது திறமையினை வெளிக்காட்டுவதற்கு
2. இறை அழைத்தலுக்கு கீழ்ப்படிந்து கஸ்டங்கள் துன்பங்களுக்கு முகம் கொடுக்க
3. தனது உறவினருடன் கூடி வாழ 4. கிறிஸ்தவர்களைக் கண்டு பிடிக்க
5. வரலாற்றில் தனது பெயரைப் பொறித்துக்கொள்ள

**7. யூத வரலாற்றில் புதிய யுகத்திற்கு வித்திட்டவர்.**

1. ஆபிரகாம் 2. யோசுவா 3. சாம்சன் 4. யூதா 5. காயின்

**8. இறைவன் மனிதனுடன் செய்து கொண்ட மூன்றாவது உடன்படிக்கையினுள் உள்ளடக்கப்படுபவர்.**

1. நோவா 2. ஆதாம் 3. யாக்கோப்பு 4. மரியா 5. ஆபிரகாம்

**9. ஆபிரகாம் இறக்கும்போது அவரின் வயது எத்தனை?**

1. 190 வயது 2. 110 வயது 3. 175 வயது 4. 200 வயது 5. 75 வயது

**10. பழைய உடன்படிக்கையின்படி இறைவனால் ஆசீர்வாதம் வழங்கப்படுவது.**

1. செழிப்பான விளைச்சல், நீடிய ஆயுள், குழந்தைச் செல்வத்தால் நிறைவு பெறுவதற்கு
2. தன் உறவுகளுடன் சேர்ந்து வாழ்வதற்கு
3. உலகிலே பெயர் பெற்றோராய் வாழ்வதற்கு
4. அவர்களது சொத்துக்களை பெருக்கிக்கொள்ள
5. அனைவரையும் நண்பர்களாய் ஏற்றுக்கொள்ள

சென்ற இதழில் 10வது வினாவிற்கான விடைகள் பிழையாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதழில் மீண்டும் அதனை திருத்தி பதிவிட்டுள்ளோம். (3)

# ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக
## For a Synodal Church

அருட் கலாநிதி அ. கிறிஸ்ரி றுபன் பெர்னாண்டோ

*பகுதி - 01*

**உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான அறிமுகமும், எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கமும், அடையவேண்டிய குறிக்கோளும்:**

**1.1 'சினொட்" (Synod) என்றால் என்ன?**

"Synod" என்ற சொல், Syn (ÓúV) அதாவது "உடன், ஒன்றாய், சேர்ந்து" என்றும், hodos (ὁδός) "பாதை, வழி" என்றும் பொருள்படும் súnodos, (σύνοδος) என்ற இரு கிரேக்கச் சொற்களிலிருந்து உருவானதாகும். அதாவது "synod" என்றால், ஒன்றாய் வருதல், ஒன்றுகூடுதல் என்று பொருள்படும்.

**1.2 மூன்று வகை உலக மாமன்றங்கள்**

a). உலகளாவிய திருஅவையின் நன்மைக்காக (Ordinary)
- சில தலைப்புக்கள் பற்றி சிந்திப்பதற்கு

b). அசாதாரண உலக ஆயர்கள் மாமன்றம் (Extraordinary)
- உலகளாவிய திருஅவையின் நன்மைக்காக உடனடியாகத் தீர்வுகள் காணப்படுவதற்கு.

c). சிறப்பு உலக ஆயர்கள் மாமன்றம் (Special)
- ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட புவியில் பகுதியை மையப்படுத்தி 2023ல் இடம்பெறப் போகின்ற 16வது உலக ஆயர்கள் மாமன்றம், சாதாரண மாமன்றமாகும்.

**1.3 "கூட்டொருங்கியக்கம்" என்றால் என்ன? What is "Synodality"?**

"திருமுழுக்குப் பெற்ற அனைத்து இறை மக்களின் ஒருங்கிணைந்த பங்கேற்பையே" இது குறிக்கின்றது. Synod (synodos) என்றாலே "ஒன்றாய் இணைந்து பயணித்தல்" என்பதாகவே காணப்படுகின்றது. கூட்டொருங்கியக்கம் என்பது திருஅவையின் இயற்கையான தன்மை யாகவும் பண்பாகவும் அதன் தலையாய குணாதிசயமாகவும் காணப்படுகின்றது.

**1.4 மான்ற பயணத்தின் உத்தியோகப் பூர்வமான இலச்சினை**

வானத்தை நோக்கிய பெரிய மரம்: நிறைந்த ஞானத்தையும் ஒளியையும், வாழ்வையும் குறிக்கின்றது. இது இயேசுவின் சிலுவை மட்டில் ஆழமான நம்பிக்கையின் அடையாளம். இது சூரியன் பிரகாசிப்பது போல நற்கருணையை தாங்கி நிற்கின்றது.

***கைகள் விரிந்திருப்பது போல கிடையாக காட்சி தரும் கிளைகள்:*** தூய ஆவியானவரை குறிக்கின்றன.

**பல வகையான மக்கள்:** இதில் 15 நபர்கள் காணப்படுகின்றனர். இது முழுமையையும் வேற்றுமையில் ஒற்றுமையையும் குறிக்கின்றது. பயணம் செய்யும் அவர்களின் நிலை மாமன்ற கூட்டொருங்கியக்க பயணத்தைக் குறிக்கின்றது.

**இவர்களின் பயணம்:** வாழ்வின் மரத்தோடு தொடங்கி அம்மரத்தோடே இணைந்து காணப்படுகின்றது. இவர்களுக்கிடையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், அதிகாரமிக்கோர், அதிகாரம் குறைந்தோர் என்ற பாகுபாடு இல்லை. ஆயரும் அருட்சகோதரியும் முன் வரிசையில் அல்லாமல் அனைவருக்கும் கடைசியிலேயே பயணிக்கின்றனர். சிறுவரும் இளையோருமே அவர்களுக்கு முன்சென்று வழிநடத்துகின்றனர்.

**1.5. 2023ல் இடம்பெறவிருக்கின்ற உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்பின் நோக்கம்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த மாமன்றத்திற்கான தயாரிப்பின் தலைமை நோக்கத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

i. தலத்திருஅவை இறைமக்களுக்கு செவி மடுக்கவும்.

ii. உரையாடல்கள் வழியாக தலத்திருஅவைக்கு அவர்கள் தங்களை வெளிப்படுத்த சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொடுக்கவும்.

iii. திருஅவை தனது ஒருங்கியக்க இயல்பை மீண்டும் கண்டுகொள்ளவும் வேண்டும்.

**1.6. கூட்டொருங்கியக்கப் பாதை திருஅவையிலே புதியதல்ல**

ஐந்தாவது நற்செய்தியென்றும் தூய ஆவியின் நற்செய்தி என்றும் அழைகப்படுகின்ற திருத்தூதர் பணிகள் நூலிலே தொடக்க கிறிஸ்தவர்கள் இந்த கூட்டொருங்கியக்கப் பயணத்தை எவ்வளவு அடித்தளமாகக் கொண்டிருந்தனர் என்பதை பல உதாரணங்கள் மூலம் காண்கின்றோம். தி.ப 1- மத்தியா தேர்ந்தெடுக்கப்படுதல்: தி.ப 2 - நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை: தி.ப 15 - முதல் எருசலேம் திருச்சங்கம்.

**1.7. கூட்டொருங்கியக்கப் பயணத்தின் மையம் – செவிமடுத்தல் (listening)**

செவிமடுத்தல் (listening) வெறுமனே செவி கொடுத்தல் (hearing) அல்ல.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த "செவிமடுத்தல்" நிலையிலே பின்னிப் பிணைந்துள்ள இரண்டு விதமான இலக்குகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது, "ஒன்று, கடவுளுக்கு செவிமடுத்தல், அதன் வழியாக நாம் மக்களின் அழுகுரலுக்கு செவிமடுக்க முடியும். இரண்டு, கடவுள் நம்மை அழைத்துள்ள அவரது திருவுளத்திற்கு ஏற்ப மக்களுக்கு செவிமடுத்தல்" என்று குறிப்பிடுகிறார் (2015ம் ஆண்டு உலக ஆயர்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பொன்விழாக் கொண்டாட்ட உரை, 17.10.2015).

**1.8. "கூட்டொருங்கியக்கம்" காலத்தின் தேவை**

திருந்தந்தை பிரான்சிஸ் - "மூன்றாவது ஆயிரமாண்டிலே (Third Millennium) "கூட்டொருங்கியக்கப் பாதையே" (Path of Synodality) திருஅவையிலே கடவுள் எதிர்பார்ப்பதாக காணப்படுகிறது.

**1.9. இந்த மாமன்றத்தைக் குறித்த தயாரிப்பால் உலகத் திருஅவை அடைவதற்காக உத்தேசித்துள்ள இலக்கு/ குறிக்கோள்**

திருத்தந்தை பிரான்சிஸ், வரவிருக்கின்ற மூன்றாவது ஆயிரமாண்டிலே (third millenni -um) கடவுள் விரும்பி அழைக்கின்ற திரு அவையாக இருக்க ஒன்றிணைந்து என்ன செய்ய வேண்டும்" என்பதை தூய ஆவியின் அருளால் தேர்ந்து தெளிவது.

தூய ஆவியானவர் திருஅவைக்கு, அனைத்து இறைமக்களின் கருத்துக்கள், ஆலோசனைகள், உரையாடல்களுக்கும் செவிமடுப்பதன் வழியாக என்ன கூறுகின்றார் என்பதை தேர்ந்து தெளிதலே இந்த மாமன்றத்தின் பயணத்தின் உயர்ந்த குறிக்கோள் (objective) ஆகும்.

இந்த உயர்ந்த குறிக்கோளை திருஅவை, இறைவார்த்தையின் ஒளியிலே, திருஅவையின் பாரம்பரியங்களை கடைப்பிடித்து, அத்தோடு காலத்தின் அடையாளங்களைப் புரிந்து அனைத்து இறைமக்களுக்கும் செவிமடுப்பதனைக் கொண்டு செயற்படுத்துகின்றது.

இறைமக்கள் திருஅவையின் ஒருங்கியங்கப் பயணம் குறித்துக் கனவு காணவும், அவர்களின் நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புக்களும் அவர்களுக்கு செவிமடுப்பதால் புரிந்துகொள்ளப்படவும், அவர்கள் திருஅவைக்குள்ளே அடைந்த ஆறாத மனக்காயங்கள் குணம்பெறவும், முறிந்த உறவுகள் புதுப்பிக்கப் பெறவும், புதிய இணைக்கும் வழிகள் அவர்களுக்கு உருவாக்கப்படவும், அவர்கள் சிந்தனைகள் நேரியவையாகவும், பொதுப் பணிக்கான மனவிருப்பத்தை அவர்களில் வளர்ப்பதையுமே தொடர்ச்சியான நோக்கமாகக் கொண்டுள்ளது.

– தொடரும்....

# உண்மையான மனதிருப்தி



ஒருமுறை சுவாமி விவேகானந்தரைப் பார்க்க இளைஞன் ஒருவன் வந்தான். "சுவாமி, எனக்கு எல்லா வசதிகளும் இருக்கிறது. ஆனால் மன அமைதிதான் இல்லை. படுக்கையில் படுத்தால் தூக்கம் வரமாட்டேன் என்கிறது. கடவுள் நம்பிக்கை நிறைய உண்டு. தினமும் எனக்குப் பிரியமான கடவுளை நீண்ட நேரம் வழிபடுகிறேன். ஆனாலும் என் மனம் அமைதியின்றித் தவிக்கிறது. கண்களை மூடி தியானம் செய்ய அமர்ந்தால், மனம் எங்கெல்லாமோ அலை பாய்கிறது. மகரயாழ் தாங்கள் தான் எனக்கொரு நல்வழி காட்ட வேண்டும்" என்றான். அவனுக்கு விவேகானந்தர் பதில் சொல்லு முன் ஒரு கதையைக் கூறுகிறார். "ஒரு காட்டுப் பகுதியில் உள்ள ஒரு குகையில், மூன்று ஞானிகள் நெடுநாட்களாகப் பசி, தாகம் மறந்து தியானத்தில் இலயித்திருந்தனர். ஒருநாள் அவர்களில் ஒருவர் வாய் திறந்து, 'சற்று நேரத்துக்கு முன் ஒரு கறுப்புக் குதிரை ஓடிற்று என்று நினைக்கிறேன்' என்றார். அதற்கு மற்ற இருவரிடமும் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. மேலும் ஆறு மாதங்கள் ஓடின. அப்போது இரண்டாவது ஞானி, 'அது கறுப்புக் குதிரையாக இருக்க வாய்ப்பில்லை. வெள்ளைக் குதிரை என்று நினைக்கிறேன்' என்றார். இவரின் வாதத்துக்கும் மற்ற இருவரிடம் இருந்தும் எந்தப் பதிலும் இல்லை. இன்னும் ஆறு மாதங்கள் கடந்தன. 'கொஞ்சம் சும்மா இருக்கமாட்டீங்களா...? இப்படியே நீங்கள் வளவள வென்று பேசிக்கொண்டு இருந்தால் நான் வேறு எங்காவது சென்று என் தியானத்தைத் தொடர்கிறேன்....' என்று கோபப்பட்டார் மூன்றாவது ஞானி. மகரயாழ், "இந்த மூன்று ஞானிகளும் கண்களை மூடி தியானிப்பதற்குப் பதில் மனதை மூடி தியானித்திருந்தால் இறைவனை அடைந்திருக்க முடியும். அதுவே உண்மையான தியானம்" என்றார். பிறகு இளைஞனின் கேள்விக்கு விவேகானந்தர், "மன அமைதி பெற சிறந்த வழி சுயநலமற்ற பொதுசேவையில் ஈடுபடுவதுதான். உன் வீட்டைச் சுற்றி வசிப்பவர்களில் ஏழைகள், ஆதரவற்றவர்கள் இருந்தால் அவர்களுக்கு உன்னால் முடிந்த உதவிகளைச் செய். கவனிப்பின்றி கிடக்கும் நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்! பிறருக்கு செய்யும் சேவையில் தான் உண்மையான மன திருப்தி இருக்கிறது. மனதில் திருப்தி இருந்தால், அங்கே நிம்மதியும், அமைதியும் குடிகொள்ளும். இதை நீ உணராவிட்டால் உன்னால் நிச்சயம் தியானம் செய்ய முடியாது. உன் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலை பாய்ந்துகொண்டுதான் இருக்கும்" என்று இளைஞனுக்கு பதில் கூறினார்.

.... ....

# பார்வைகள் பலவிதம் - 10

- ஹென்றி -



ஒரு கிராமத்தில் வாழ்ந்த மக்கள் எல்லோரும் தங்கள் துன்பம்தான் பெரியது என்று மனம் நொந்து கண்டபடி கடவுளைத் திட்டினார்கள். அதனால், கடவுள் ஒரு நாள் அவர்களிடம், "நீங்கள் எல்லோரும் அவரவர் கஷ்டங்களை மூட்டையாகக் கட்டி மறுநாள் மாலை ஏழு மணிக்குள் கோயிலில் கொண்டுவந்து போடுங்கள்" என ஆணையிட்டார். ஊர் மக்கள் எல்லோரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்கள் கவலைகளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு கோயிலுக்கு வந்தனர். கோயில் கதவு சாத்தப்பட்டது. கடவுள் சொன்னார், "இப்போது விளக்குகள் அணையும், உங்கள் துன்ப மூட்டையைப் போட்டுவிட்டு, வேறு மூட்டையை எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது, உங்களுக்குப் பிடித்த மூட்டையை எடுத்துக்கொள்ள வேண்டும்". கடவுள் சொன்னபடி விளக்குகளை அணைத்தார். எல்லோரும் அவரவர் மூட்டையை வீசிவிட்டு, விரைவாக தாங்கள் வீசிய தங்கள் மூட்டையையே எடுத்துக்கொண்டனர். மீண்டும் விளக்கு எரிந்ததும், "அப்பாடா, நல்ல வேளை இது எனது மூட்டை, அதே மூட்டை" என்று ஒவ்வொருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். அப்போது ஒருவர், "ஏன் நீங்கள் வேறு ஒரு மூட்டையை எடுத்திருக்கலாமே" என்று கேட்டார். அதற்கு அவர் "சும்மா இருய்யா, எனக்கு ஆஸ்த்துமா இருக்கிறது. இந்த மூட்டையைப் போட்டுவிட்டு வேறு மூட்டையை எடுத்து, அதில் எய்ட்ஸ் இருந்தால் என்ன செய்வது" என்று சொன்னார்.

- லாலா லஜபதிராய் -

"நம்பிக்கையே என் மதம். தோல்விக்கு எப்பொழுதும் நான் தயார். ஒவ்வொரு தோல்வியிலும் வெற்றியைக் காண ஒரு புது வழி இருக்கிறது. ஆதலால் மனத் தளர்ச்சி கூடவே கூடாது".





# அந்த குருவை மறந்து...



**டெனிஸ்டன்** - *சொறிக்கல்முனை*

அம்பு பாய்ந்த
அட்டைகள் ஏந்தி
அதனிடை ரோஜா
மலரதை சொருவி
அவனிவன் கவிதைகள்
அவரவர் ஆசைகள்
எல்லாம் அதனுள் எழுதி
கையேந்தி நின்று
கையிடை திணித்து
காதலதை சொல்ல
நாளிது என்பார்
காதலர் தினமிது என்பார்.

வகை வகையாய்
பரிசுகள் வாங்கி
வாழ்த்து மடல்களில்
சித்திரம் தீட்டி
நட்சத்திர விடுதிகளில்
விருந்துபசாரங்கள் பொழிந்து
தங்க நகையும்
அங்க வஸ்திரமும்
அவளுக்கு அவனும்
அவனுக்கு அவளும்
வாங்கியிறைக்கும்
வர்த்தக உலகிற்கு
வாய்ப்பாய் போனது
இந்த காதலர் தினம்!

இரத்தத்தில் இதிகாசம்
படைத்த குரு அவன்
இறந்த தியாகம்
எவர் அறிவார் ...?
வலன்டைன் எனும்
வாய்மை வீரன்
வரலாற்றில் கொல்லப்பட்ட
காரணமும் யாரறிவார் ...?
கற்பினை கறக்கவும்
காதலின் பேரில்
களியாட்டம் போடவும்
காதலர் தினம் வாய்ப்பாவதோ!

கூடியாடும் பாவையர் சிலையும்
கழுத்து பின்னிய
அன்னங்களின் சிலையும்
தாஜ்மகாலின் சிலைகளும்
நிலவொளியில் கூடும்
கிளிகளின் ஓவியமும் தான்
காதலர் தினத்தை
சிறப்பிக்கும் சின்னமாக...
அந்த வலன்டைன் சிலையை
வாங்க கூட யாருமில்லாது
போனதேன் ....?

காதலர்களே! காதலர்
தினத்தை கொல்லாதீர்கள்...
அது வலன்டைன் எனும்
குரு உயிர் கொடுத்த தினம்.
அன்று காதலிக்காக
பறிக்கப்படும் ரோஜாக்கள்
இரண்டையேனும்
அவன் கல்லறையில்
நன்றி கூறி வையுங்கள்
அல்லது அந்த குரு அவரை
அன்று ஒரு நொடியேனும்
நினைத்து நன்றி கூறுங்கள்.

பிறர் என்னைக்
குறை கூறியதில்லை:
காரணம் நான் பிறரைப் பற்றிக்
குறைவாகப் பேசியதில்லை.
பிறரைப்பற்றி நான்
சிந்திப்பதில்லை: காரணம்
என்னைப் பற்றிய சிந்தனைகளே
இன்னும் முடியவில்லை. பிறரைக்
கண்டு நான் அஞ்சுவதில்லை:
காரணம், என் உள்ளத்திலே பிறர்
அஞ்சத்தக்க கருத்துகள் இல்லை.
**- டேல் கார்னஜி -**



அதிகமாகப் பேசுவதால் மட்டுமே
ஒருவன் அறநெறியை அறிந்து
விட்டதாகக் கூறமுடியாது. கற்றது
சிறிதளவாய் இருப்பினும் அதை
வாழ்க்கையில் கடைபிடிப்பவனே
தர்மத்தை அறிந்தவன் ஆவான்:
அதை ஆதரிப்பவன் ஆவான்.
**- புத்தர் -**



# ஒரு வெண்மணற் கிராமம்

## காத்துக்கொண்டிருக்கிறது






### அத்தியாயம் 4

தெருவோரத்தேயிருந்த பனிச்சை மரம் வளவுக்குள்ளேயிருந்த மாமரத்திற்குப் போட்டியாகக் கண்ணைப் பறிக்கும் இளஞ்சிவப்பு நிறத்தில் இளந்தளிர்களைப் பொதுளிக் கொண்டு குடைகவிந்து நின்றது. எதிர்வளவுக்குள்ளே மூலஸ்தானம் மட்டும் கல்லால் அமைந்த பிள்ளையார் கோயிலின் முன்னால் அமைந்திருந்த ஓலைப்பந்தலின் கீழ் இருந்த கல்லில் பூசாரியார் செவ்வரத்தம் பூக்களை வைத்துக் கொண்டிருந்தார். பூவரசந்தீவுப் பக்க மிருந்து வரும் மாட்டு வண்டிகளும் கண்டக்காட்டை நோக்கிப் போகும் வண்டிகளும் தெருவிலே புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றன. சந்தியில் வேலும்மயிலும் தேத்தண்ணீர்க் கடையில் பிளேன்ரீ அடிக்கும் சப்தம் அமர்க்களமாகக் கேட்டது.

தாமோதரத்துக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. மாமாவின் வீட்டிற்குப் போகலாம் என்ற எண்ணம் தோன்றியது. ஆனாலும் இந்த அதிகாலையிலா போவது? என்று அந்த எண்ணத்தைக் கைவிட்டுப் பனிச்சைமரப் பக்கமாக நடந்தான். எதிரேயுள்ள கோயில் வளவு முழுவதும் சருகுகள் நிறைந்து காணப்பட்டன. இன்று வெள்ளிக் கிழமை வழிபாட்டுக்காக வரும் பாடசாலைச் சிறுவர்கள் வளவைக் கூட்டிப் பெருக்குவார்கள் என்று பூசாரியார் எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும். அவருக்கென்ன சம்பளமா? அந்தக் கோயிலுக்கு எந்த அரசன் நிவந்தம் கொடுத்தி ருக்கிறான்? கூறு சங்கு தோல்முரசு கொட்டோசை யைப் பூசாரியார் நேரத்துக்கு நேரம் கொடுத்து வருகிறாரே அது போதாதா?

கோயில் வளவைக் கூட்டிப் பெருக்கலாம் என்று முன்னேறிய தாமோதரத்தைத் தேநீர்க் கடைப்பக்கமிருந்து வந்த கைதட்டல் திரும்பிப் பார்க்க வைத்தது. தேநீர்க்கடைக்குள்ளிருந்து பாலாவும் பரமனும் வந்துகொண்டிருந்தார்கள். அவசர அவசரமாக வந்த பாலா தாமோதரத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு, “எப்படாப்பா வந்த நீ. பாடசாலை லீவு விட்டாச்சா” என்று கேட்டான்.

“என்ர கிளாசுக்கு மட்டும் லீவு. ஆனாச் சித்திரை வருஷங் கழிச்ச அடுத்தநாள் போகவேணும்.

ஆவணி மாதத்தில கடைசிச் சோதனை புரட்டாசியில தான் மறுபடியும் இங்க வருவன்."

"அப்ப நல்லதாப் போச்சு. நாளைக்கு நீ இல்லியே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தன்."

"ஏன் என்ன சங்கதி?" என்று வினாவினான் தாமோதரம். "ஒண்ணுமில்ல நம்ம எம்.பி. நாளைக் காலையில இஞ்ச வாரார். நேற்றுத்தான் அறிவிச்சி ருந்தார். நாளைக்குப் பத்து மணியளவில வந்து சாயந்தரந்தான் திரும்புவாராம், இந்த ஊரில மக்கள்ர குறைகளை அறிய வேண்டுமாம், அதுக்குத் தான் வாறாராம், என்று விளக்கினான் பாலா.

தொடர்ந்து "இன்னமும் பெரியையாட்டக்கூடச் சொல்லல்ல. மத்தியானச் சாப்பாட்டை பாடசாலை யிலேதானே எம்.பி.க்குக் கொடுக்க வேணும்' என்றான் பரமன்.

பரமன் ஆலங்கேணி இளைஞரிடையே ஒரு முக்கியமான பேர்வழி. இரண்டு நிலைக் கண்ணாடிகளும் நான்கு யப்பானியப் பெண்களைத் தனித்தனியே சட்டமிட்ட படங்களும் மண்சுவரிற் தொங்கும் சலூன் என்னும் சிகையலங்கார நிலை யத்தை அவன் நடத்தி வந்தான். நான்கு படங்களுக் கும் நடுவாகப் பேரறிஞர் அண்ணாத்துரை யின் படம் தினம் தினம் புத்தம் புது மாலைகளுடன் காட்சியளிக்கும். அத்தோடு அவன் சலூனுக்கு நாள் தவறாமல் வீரகேசரி வரும், வாரந்தவறாமல் சுதந்திரன் பத்திரிகையும் வரும், சுயமரியாதைக் காரர்களின் சின்னஞ்சிறிய புத்தகங்களும் அங்கே இருக்கும், இதனால் பனிச்சைமர நிழலில் அவன் சலூனுக்கு முன்னால் எப்போதுமே இளைஞர் கூட்டம் ஒன்று குழுமியிருக்கும். அத்தோடு அவன் கையிற் தினந்தினம் காசு புரளும். கடந்த ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடந்தபோது அவன் சலூனும் பனிச்சைமர நிழலுந்தான் தமிழரசுக் கட்சிக் காரியாலயமாக விளங்கின.

நெல்லியடியிற் படித்துக் கொண்டிருந்த தாமோதரத்திற்குச் சோஷலிச தத்துவார்த்தங்களிற் பிடிப்பு ஏற்பட்டிருந்தாலும் ஆலங்கேணியில் அந்தக் கந்தப தத்துவம் எடுபடாது என்ற விவகாரம் தெரியும். ஆகவே ஊரோடு அவனும் தமிழரசுக்கட்சி ஆதரவாளனானான்! மேலும் இரண்டு வருடங்களுக்கு முன்னே நாட்டில் நடந்த இனக்கலவரம் தமிழ் மக்களை எல்லாம் ஏதோ ஒரு கட்சியின் கீழ் ஒன்றிணைய வேண்டும் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது.

ஆலங்கேணியைப் பொறுத்த வரையும் இனக்கலவரம் என்ற ஒன்று நடக்கவில்லைதான். ஆனாலும் தன் எருமைகளைத் தேடித் கொண்டு திருக்கிணா மோட்டுக்குச் சென்ற மாட்டுக்கார வல்லிபுரம் அக்கலவரத்தின்போது அருகேயிருந்த மன்னம்பிட்டிக்குச் சென்று பொலநறுவையிற் கலவரத்தில் மாட்டிக்கொண்டு ஒரு மாதத்திற்குப் பின்னர்தான் ஊருக்குவந்து சேர்ந்தார். பொலநறு வைக் கலவரத்தைப்பற்றி அவர் கூறிய கதைகள் ஆலங்கேணி மக்களுக்கும் உணர்ச்சியை ஊட்டிற்று, அந்தக்காலகட்டத்திற்தான் பரமனின் முயற்சியால் பாலா தமிழரசுக் கட்சிக்கிளையை ஆலங்கேணியில் ஆரம்பித்தான்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் பாராளுமன்றத் தேர்தல் வந்தது. இலங்கை சுதந்திர மடைந்த காலந்தொட்டு நடைபெற்ற மூன்று பாரா ளுமன்றத் தேர்தல்களிலும் ஆலங்கேணி மக்கள் மூதூர்த் தொகுதியிற் பெரும்பான்மையினராக வாழ்ந்த முஸ்லிம் ஒருவருக்கே வாக்களித்தார்கள்.

ஆலங்கேணியின் அருகாமையிலிருந்த கிண்ணியா மிகப் பெரிய முஸ்லிம் கிராமம். கிழக் கிலங்கையிலே காத்தான்குடிக்கு அடுத்ததாகப் பெரிய கிராமமான கிண்ணியாவிலிருந்துதான் மூதூர்த் தொகுதி எம்.பி. ஒருவர் வரக்கூடியதாக இருந்தது.

கிண்ணியா அபேட்சகர் யாரோ ஒருவருக்கு எந்தவிதமான உணர்வும் பிடிப்பும் இன்றி வாக்களித்த ஆலங்கேணி மக்கள் தம் கிராமத்திற் தமிழரசுக் கட்சிக்கிளை நிறுவப்பட்ட பின்னர் தமிழரசுக்கட்சி நிறுத்திய தமிழ் அபேட்சகருக்கு உணர்ச்சி வயப்பட்டு வாக்களிக்கக் கூடிய வகையில் மூதூர்த் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதி ஆக்கப்பட்டது. தமிழரசுக்கட்சிப் பிரசாரத்தில் தாமோதரமும் உற்சாக மாக ஈடுபட்டான்.

அந்த ஆண்டு அடுத்தடுத்து நடந்த இரு தேர்தல்களிலும் ஆலங்கேணி மக்களும், அயலி லுள்ள ஈச்சந்தீவு, உப்பாறு என்ற கிராமங்களின் தமிழ் மக்களும் தமிழ் அபேட்சகருக்கே வாக்களித் தனர். தங்கள் கட்சியும், தமது அபேட்சகரும் இரண்டு தேர்தல்களிலும் அமோக வெற்றிய

டைந்தமையை தமிழரசுக் கட்சியைத் தாபித்த இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். ஊரிலுள்ள கிழடுகட்டைகள் தங்கள் சொந்தக்காரன் எம்.பி. யாகிவிட்டான் என்று பெருமைப்பட்டார்கள்.

அந்தப் பாராளுமன்ற அங்கத்தவர் வெற்றிவிழா கொண்டாடக் கிராமத்திற்கு வந்த பின்பு ஒன்பது மாதங்கள் கழித்து மீண்டும் கிராமத்த வர்களைச் சந்திக்க வருகிறார்.

“அவருக்குக் கோலாகலமாக வரவேற்பு அளிக்க வேண்டும். அட்ரஸ் பேப்பர் எழுதி வாசிக்க வேண்டும்” என்று உற்சாகத்துடன் சொன்னான் பரமன்.

தாமோதரம் சொன்னான், “அவரை வரவேற்கத்தான் வேண்டும். ஆனால் அதற்காகப் பந்தல் போடவோ மேடை அமைக்கவோ, லவுட்ஸ் பீக்கர் கட்டவோ தேவையில்லை. ஏனென்றால் அவர் முதற் தடவையாக இங்கு வரவில்லை. மக்களின் குறைகளைக் கேட்கவே வருகிறார். அதற்காக நாம் மக்களுக்கு உதவிசெய்து அவர்களை நெறிப்படுத்தலாம். நாம் செய்ய வேண்டியது அதுதான்.”

அவன் சொன்னதைப் பாலாவும் ஆமோதித் தான். ஆனாற் பரமனுக்கோ கூட்டம் வேண்டும். மாலை வேண்டும். ஒலிபெருக்கி வேண்டும், என்றி ருந்தாலும் வேறு வழியின்றிப் பரமனும் அவர்களுக்கு உடன்பட்டாலும் “எம். பிக்கு நல்ல பூமாலைகளாவது போட வேண்டும், உன்ர மச்சாள் சௌந்தரம் சோக்காக மாலை கட்டுவாள், போனமுறை வரவேக்கக்குள்ள அவள்தான் மாலை கட்டித்தந்தாள். திருக்கிணாமலையில் கூட அப்படி மாலையை நான் பார்க்கல, அவட்டச்சொல்லி இரண்டு மாலையாவது கட்டித் தா” என்றான் பரமன்.

“ஓ அதுக்கென்ன?” என்றான் தாமோதரம்.

“அத்தோட சாப்பாட்டு விஷயம். ஒரு கிடாய் அறுத்துப் பாடசாலையில விருந்து போடுவம்.”

“ஒரு ஆளுக்காகவா ஒரு கிடாய்?”

“அவர் என்ன திருக்கிணாமலையில இருந்து தனியாவா வருவார்? அத்தோட அவர் வாறார் என்று கேள்விப்பட்டு மூதூரில இருந்தும் கட்டப்பறிச்சானில் இருந்தும் ஆக்கள் வருவாங்க. எப்படியும் முப்பது பேருக்குக் குறையாது, ஒரு ஆடு அடிக்கத்தான் வேணும்.


“அதைப்பற்றித் தலைமை வாத்தியாரோட யோசிப்பம்’ என்றான் தாமோதரம். அப்போது பாடசாலைத் தாழ்வாரத்திற் தொங்கிய தண்டவாளத்துண்டில் இரும்புக்கம்பியால் அடித்து எழுப்பிய ஓசை, பாடசாலை தொடங்க இன்னமும் அரை மணித்தியாலம்தான் இருக்கிறது என்ற செய்தியை ஆலங்கேணி கிராமம் முழுமைக்கும் அறிவித்தது. தெருவிலே மாணவர்களும் மாணவி களும் தங்கள் புத்தகங்களுடன் பாடசாலையை நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள்.

“அப்ப நான் போய்க் கடையைத் திறக்கிறன். நீர் போய்ச் சௌந்தரத்திட்ட மாலை கட்ற விஷயத்தை இப்பவே சொல்லும்” என்ற பரமன். தாமோதரத்தின் கையைப்பிடித்துக் கொண்டே கடைப்பக்கம் செல்கையில் தாமோதரத்தின் மாமா வீட்டுத் தெருப்படலையைத் திறந்து அவனை உள்ளே தள்ளி விட்டுப் பாலுவோடு சேர்ந்து மேலே நடந்தான்.

**– அத்தியாயம் 5**

**தெ**ருப்படலையைத் தாண்டி வெண்மண லில் இறங்கித் தன் மாமனார் வீட்டை நோக்கி நடந்தான் தாமோதரம். ஆலங்கேணிக் கிராமத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓட்டு வீடுகளில் அவனது மாமனார் வீடும் ஒன்று. இரண்டு அறைகளும், ஒரு பூஜையறையும் கொண்ட வீட்டின் முன்னால் விசாலமான விறாந்தையும் கொண்ட அவ்வீட்டுக்குச் செல்லும் வழியில் ஒரு பாக அகலமான மணற்பாதையில் இருமருங்கிலும் செங்கற்கள் நடப்பட்டு சுண்ணாம்பு தீட்டப்பெற்றி ருந்தது. கற்களுக்குப் பின்னாற் கிராமத்தவரால் “கானல் வாழை” என்றழைக்கப்படும் கனாஸ் செடிகள்’ மஞ்சளும் சிவப்புமாகப் பூத்திருந்தன. அவற்றினிடையே சமமான இடைவெளிகளில் குரோட்டன்கள் பல்வேறு நிறங்களிலும் இருபக்கமும் அணிவகுத்து நின்றன. விறாந்தைக்கு முன்னால் பென்னம் பெரிய பந்தலில் கொடிமல்லிகை படர்ந் திருந்தது. மல்லிகைப் பூக்களின் சுகந்தம் மனத்துள் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

– தொடரும் ....



# சுதந்திரம்

**கடுகுக் கதை 117**

– பற்றி

அன்ரனின் பக்கத்து வீட்டில் சற்றுக் கலவரமான சத்தம் கேட்டது. எவரேனுக்கும் வருத்தம் வாதையோ என்று எண்ணி அன்ரன் தன் மகனுடன் அங்கு சென்றார்.

அங்கு வீட்டுத் தலைவன் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்,

"அன்ரன்! இந்த நாசமறுவான் செய்த வேலயப் பாருங்க.... முப்பதாயிரம் குடுத்து வாங்கின நாய கூட்டத் திறந்து கலச்சுப் போட்டான் ..... இப்ப அத எங்கபோய் தேடுறது....?" என்று புலம்பினார்.

அவரின் மூன்றாம் வகுப்பு படிக்கும் மகன், நாய்க்கூட்டைத் திறந்து நாயை விரட்டிவிட்டான். அப்பையன் அன்ரனின் கையைப் பிடித்து,

"அப்பா எனக்கு ஏசுறார்.... அவருக்கு ஒண்டும் விளங்குதில்ல .... கழுத்தறுத்து நகை–யெல்லாம் பறிப்பானுங்க எண்டுதான் நாய கொண்டு வந்தவர். அது பாவம் அங்கிள்.... இண்டைக்கு நம்மட நாட்டுப் பெரியவரும் ரிவிமில சொன்னவர், 'இலங்கையில் எல்லாருக்கும் சுதந்திரம் உண்டு' எண்டு. அதுதான் நான் நாய்க்கு சுதந்திரம் குடுத்தனான்....."

அன்ரனுக்கு அப்பையனை அப்படியே தூக்கி முத்தம் கொடுக்கவேண்டும்போல் இருந்தது: அப்பையனின் தகப்பன் திட்டுவாரே என்ற தயக்கமும் இருந்தது.

அன்ரனின் மகன் சொன்னான், "அப்பா! நம்மட இனத்திற்கு ஒரு தலைவன் உண்டாயிற்றான்....". இவர்களுடன் நின்று கொண்டிருந்த அன்ரனின் நாய் வாலை ஆட்டிக்கொண்டு இரண்டு காலில் நின்றவாறு என்னவோ சொன்னது....

அன்ரன் மனதிற்குள் சொல்லிக்கொண்டார், 'இந்த நாயை நான் கூட்டுல போடுறதும் இல்ல: கட்டி வைக்கிறதும் இல்ல.... இப்ப அது நன்றி சொல்லுதா? இல்ல இன்னும் சுதந்திரம் வேண்டும் என்று சொல்லுதா....?'

## டிப்ஸ் ... டிப்ஸ் ... டிப்ஸ் ...



- வாரம் ஒரு முறை முடக்கத்தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5 நிமிடம் ஊறியதும் குளிக்கவும். இதுபோல் தொடர்ந்து மூன்று மாத காலம் குளித்து வந்தால் முடி கொட்டுவது நின்று விடும். அதுமட்டுமல்ல இந்த கீரை, நரை விழுவதையும் தடுக்கும். கருகருவென முடி வளரத்தொடங்கும்.

- நான்கு வெற்றிலை, மூன்று மிளகு ஆகியவற்றை மென்று விழுங்கினால் நீர்க்கோவை, தலைப்பாரம் ஆகியவை குணமாகும்.

- சதா மூக்கு ஒழுகிக் கொண்டே இருந்தால் ஜாதிக்காயை தண்ணீர் விட்டு உரசி அதை சூடேற்றி மூக்கு, நெற்றி மீது பூசினால் மூக்கு ஒழுகுவது நிற்கும்.

- சுக்கை தட்டி அதைக் கசாயமாகப் போட்டு தேனுடன் கலந்து சாப்பிட்டால் ஜலதோஷம் போய் விடும்.



- சமையல் செய்யும்போது கையில் சூடு பட்டுவிட்டால் முட்டையின் வெள்ளைக் கருவை போடுங்கள் அல்லது பீட் ரூட்டை பிழிந்து அதன் சாறை எடுத்து தடவுங்கள்.

- பாகற்காய் கசப்பு நீங்க அரிசி களைந்த நீரில் ஐந்து நிமிடம் பாகற்காயை ஊற வையுங்கள்.

- மாவு அரைக்கும்போது இரண்டு மூன்று வெண்டைகாய்களை நறுக்கி போட்டு ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணையும் சேர்த்தால் இட்லி மல்லிப்பூ போல மிருதுவாக இருக்கும்.



# திறமைதான் நமது செல்வம்



ஜே. எச். இரத்தினராஜா

உழைப்பவனுக்கு ஒரு காசு, மேய்ப்பவனுக்கு ஒன்பது காசு என்பார்கள். செங்கல் அடுக்கி சிமெண்ட் பூசும் மேஸ்திரிக்கு சம்பளம் ஆயிரம், அவரை வேலை வாங்கும் பொறியியலாளர் பெறுவது ஐந்தாயிரம். ஏன் இந்த வேறுபாடு?

முன்னவர், சொன்னதை மட்டும் செய்யக் கூடியவர்; அதற்கு மேல் ஒரு படி கூட சுயமாகச் செய்யத் தெரியாது. பின்னவர், எதையும் ஏன், எப்படி, எப்பொழுது செய்ய வேண்டும் என்றெல் லாம் முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு, அதனை பிறரைக்கொண்டு வெற்றிகரமாகச் செய்து முடிப்பவர்; பொறுப்பும் திறமையும் மிக்கவர்.

ஒரு பணக்காரருக்கு இரண்டு வேலைக்காரர் கள். அவர்களில் ஒருவனுக்கு மட்டும் அதிக சம்பளம் கொடுத்து வந்தது பற்றி மற்ற வேலைக் காரன் அவரிடம் பெரிதும் குறைபட்டுக்கொண்டான். பணக்காரர் அவனை அழைத்து "வீட்டின் வெளியே சென்று தெருவில் எவராவது இருக்கிறார்களா என்று பார்த்து விட்டு வா" என்றார். அவனும் வேகமாக ஓடிச்சென்று பார்த்துவிட்டு, "ஆம் ஐயா, தெரு முனையில் ஒருவர் நின்று கொண்டி ருக்கிறார்" என்றான்.

இப்பொழுது அந்த பணக்காரர் அடுத்தவனை வெளியே அனுப்பினார். வந்தவன் தெரு முனையில் நின்றுகொண்டிருப்பவர் ஒரு ஓய்வு பெற்ற வங்கி ஊழியர் என்றும், அவர் பெயர் முருகன் என்றும், அவர் அடுத்த தெருவில் முதல் வீட்டில் குடியிருப்பவர் என்றும் அருகில் உள்ள பூங்காவில் விளையாடிக்கொண்டிருக்கும் தனது பேரனை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றும் விலாவரியாக எடுத்துக் கூறினான்.

பணக்காரன் குறைபட்டுக் கொண்டவனைப் பார்த்து, "இப்பொழுது புரிகிறதா, அவன் அதிகச் சம்பளம் பெறும் காரணம்" என்றார் சிரித்தபடி. சொன்னதை மட்டும் செய்வது என்பது வேலை மட்டும்தான். ஆனால், அதற்கும் மேல் அதிகப்படி சிந்தித்து அழகாக செய்வது என்பது திறமையான வேலை.

ஊரில் எத்தனையோ மருத்துவர்கள், வழக்கறி ஞர்கள், பொறியியலாளர்கள் இருந்தாலும், ஒரு சிலரிடம் மட்டும் எல்லோரும் சென்று மொய்த்துக் கொள்கிறார்களே ஏன்? ஏனெனில், அவர்கள் மக்களின் எதிர்பார்ப்பினை திறம்படச் செய்து முடிக்கிறார்கள். விரும்புகிற வெற்றியினை பெற்றுத் தருகிறார்கள். திறமைசாலிகளுக்கே இவ்வுலகம் வழிவிட்டு நிற்கிறது. 'வெட்டி வா என்றால், கட்டிக்கொண்டு வருபவர்கள்', 'எள் என்பதற்கு முன்பே எண்ணெயாக நிற்பவர்கள்', 'கோடு போட்டாலே ரோட்டையே போடுபவர்கள்' என்று இப்படிப்பட்டவர்களுக்குத்தான் என்றும் எங்கும் மவுசும், மரியாதையும் இருக்கும்.

வெறும் இச்சை மட்டும் இருந்தாலே அது திறமையாகி விடாது. மூச்சடக்கிக் கட்டினால்தான் "முனி" என்று ஏற்றுக்கொள்வார்கள். திறமைசாலி ஒரு போதும் பொருட்களை வீணாக்கமாட்டான். எதையும் விரைந்து செய்து நிறைவாக்குவான்.

மனதை அலைபாய விடாமல் செய்யும் செயல்களில் ஒருநிலைப்படுத்தி, தன்னைக் கட்டுப்படுத்தி, புறச்சூழல்களின் நெருக்கடிகளையும் மீறி, எதிர்பார்த்த முடிவுகளை தரக்கூடியவன்தான் திறமைசாலி. வெறுமனே மாங்கு மாங்கு என்று செக்கு மாடுகள் போல், அரைத்த மாவையே அரைத்துக்கொண்டு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

அதிக நேரம் எடுத்து உழைப்பது என்பது திறமையாகி விடாது. நேரத்தையும், ஆற்றலையும் வீணாக்காமல் அடைய விரும்பும் முடிவுகளை எட்டிப்பிடிப்பதுதான் திறமையாகும். கடவுள் அருளால் அனைவருக்கும் அருளப்பட்டதுதான் திறமை. அதை நாம் விரும்பினாலும் இழக்க

முடியாது. அந்த அளவில் அது பணத்தைக் காட்டிலும் மதிப்பு கொண்டது.

இருக்கும் திறமையைச் சரிவர பயன்படுத்தாமல் "குடத்தில் இட்ட விளக்காக" இருக்கின்றோம். நமது தலையெழுத்தையே மாற்றவல்ல ஏதேனும் ஒரு திறமையாவது எவரிடமும் நிச்சயம் இருக்கும். அதனைத் தேடிப்பிடித்து சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்தான் அனைவரின் வெற்றி என்பது ஒளிந்து கொண்டு இருக்கிறது. சோதனைக் காலங்களில்தான் ஒருவரது திறமை வெளிப்படு கின்றது. நமது எதிரிகளே நமது திறமைகளை கூர்மையாக்குகிறார்கள். எதிலும் முழுமையை எதிர்பார்ப்பது, எதையும் தள்ளிக்கொண்டே போவது போன்றவைகள் திறமைக்கு முட்டுக்கட்டை போடுவன. அலை ஓய்ந்தபின் தலை மூழ்கலாம் என்று காத்திருந்தால் ஒரு போதும் காரியம் நடவாது. திறமையால் தகுதியும், தகுதியால் தக்கதொரு நிலைமையும் நம்மால் நிச்சயம் அடைய முடியும். நேரத்தை முறையாகத் திட்ட மிட்டு பயனுள்ள வகையில் செலவழித்தால் நமது திறமை பத்து மடங்கு அதிகரிக்கும்.

ஆற்றல் என்பது செயலுக்குத் தேவைப்படும் ஒரு மூலப்பொருள்தான். அது நம் கையிலுள்ள அருமையான கைத்துப்பாக்கி போன்றது. திறமை என்பது அதை குறி பார்த்து கையாளும் திறன் போன்றது. திறமையற்றவன் கையில் அந்தத் துப்பாக்கி இருப்பதில் என்ன பயன்?

எனவே, ஆற்றலை நல்லபடி பயன்படுத்த வேண்டுமெனில், நமக்கென்று ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். சரியான திட்டமிடப்பட வேண்டும். பொருத்தமான செயல்முறை வேண்டும். செய்யும் செயல் பற்றிய சிறப்பான அறிவும், அனுபவமும் அவசியம் வேண்டும். மேலும், பொறுமையும், இடையறாத பயிற்சியும், புதுமை நோக்கும், தன்மையும் சூழலையும் கட்டுப்படுத்தும் திறனும் இருப்பின் நம்மால் எத்தனையோ காரியங்களை எளிதாகவும், வெற்றிகரமாகவும் முடித்திட முடியும்.

■■■

---

*"உங்களுக்கு தோல்வி கிட்டும்போது ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால், நீங்கள் முயற்சி செய்யாவிட்டால் உங்களுக்கு பெரிய அழிவே ஏற்பட்டுவிடும்"* - **பெவரி ஸில்ஸ்**

---

# சோதனை தரும் போதனை



**கவிதாயினி**
சுஜி பொற்செல்வி

வசந்தத்தை எதிர்பார்த்துக்
கனவுகளை நமதாக்கிக்
காத்திருக்கும் ஒரு மனது

விடியும் விடியும் என
நிலைமையும் மாறுமென
நேசக்கரங்கள் நீட்டும்
இன்னுமொரு மனது

பட்டதெல்லாம் போதுமடா
புத்தி கொஞ்சம் மாறுதடா
எட்டிப்பிடிக்கத் தோணுதடா
விட்ட இடத்தைத் தேடுதடா
என்று ஏங்கும் பல மனது

பாவங்கள் சொரிந்ததாலோ
பாவிகளின் இராட்சியமிங்கு
கோபக்கணை சுமப்பதாலோ
உலோபியாக நாடகங்கள்
போடும் சிலமனது

சோதனைகள் தரும் போதனை கூட
மாயங்களால் மறைந்து போகும்
வேதனைதான் வாழ்க்கையடா
மனிதனுக்கே பாடமடா

திருந்தி வாழா மனங்களிலே
மருந்தாகும் உறவுகளும்
இறைவன் தந்த பொக்கிசங்கள்
எனப் போற்றும் நல்மனது

இறைவழியில் நாடுவோரை
தொடர்ந்து வரும் நற்பலன்கள்
நாத்திகனாய் நீயிருந்தால்
போலிகளின் அடிமையாவாய்
எனக் கூறும் ஒரு மனது



பாடுபட்டு உழைப்போரும்
பாவங்களை வெறுப்போரும்
மார் தட்டி உரிமையோடு
உறவுகளைப் பேணுவோரும்
மடமைகளைத் துறந்தே
மற்றவரை மதிப்போரும்
சிறுமைத் தனம் நீங்கி
செழிப்புடனே வாழ்ந்திடுவர்



# அன்பெனும் அடராய்

– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

'எத்தனை நாளைக்குத்தான் இப்படி. நானே சமைச்சு.. நானே சாப்பிட்டு.. நாக்கு மரத்துப் போச்சு..ஊரில இருந்தாலும் வாய்க்கு ருசி யாக சாப்பிடலாம்.ம்..எண்டைக்கு சொந்த நாட்டை விட்டு வந்தனோ அண்டைக்கு தொடங்கியது இந்த இயந்திர வாழ்க்கை. உறைப்பு, புளிப்பு,.. சாப்பாட்டிலும் இல்லை வாழ்க்கையிலும் தான்.

ஊர்ல என்ன வாழ்க்கை? நல்லது, கெட்டது எத்தனை நடக்கும்....? கல்யாண வீடு, அந்தியேட்டி, சாமத்தியச் சடங்கு, திருவிழா, மாட்டு வண்டிச் சவாரி, விளையாட்டுப் போட்டி..... இனி எங்கட கிராமத்தில அடுப்பு நாச்சி, காளிமடை, வைரவர் மடை... இப்பிடி எத்தனை, எத்தனை விசேசங்கள்..

ஊர்ல இருந்தால் ஒரே கொண்டாட்டம்தான்...... என்ன செய்வது? இப்படி வந்து கஷ்டப்பட வேண்டி வந்துவிட்டது?

'உழைக்க வேண்டிய வயது
இதுதானே என்று விமானம் ஏறி வந்தேன்.
வாழ வேண்டிய வயதும்
இதுதான் என்பதை மறந்து..'

யாரோ எழுதிய புதுக்கவிதையை வெளிநாட்டுக்கு வந்த பின்புதானே பார்த்தேன்'

'என்ன இன்று ஒரே ஊர் யோசனையும் வீட்டுச் சிந்தனையும் ....'

ஆதங்கத்தோடு சிந்தனையில் மூழ்கியிருந்தவனை ரெலிபோன் மணி கனடாவுக்குக் கொண்டு வந்தது.

யாரோ நண்பர்கள்தான்... பொழுது போகாமல் போனில் அலட்டப் போகிறார்கள் என்று நினைத்தபடி...

"ஹலோ.... ஹலோ ராஜன் ஹிய..." என்று குரல் கொடுத்தான்.

"ராஜன், ராஜன்... நான் சிவம் மாமா பேசுறன் ...."

"ஓமோம் ... சொல்லுங்கோ மாமா"

ராஜனுக்கு ஊரிலிருந்து வரும் குரலைக் கேட்ட வுடன் சந்தோஷம்தான். இருந்தாலும் என்ன வழமைக்கு மாறாக இருக்கிறதே. ஒரு நாளும் எடுக்காத சிவம் மாமா..... இந்த நேரத்தில்..?

"என்ன மாமா? சொல்லுங்கோ.. '

அக்காவுக்கு ஏதோ முற்றாக்கிப் போட்டினமோ... அக்கா முதிர் கன்னியாக இருப்பதும் அவவுக்கொரு வாழ்க்கைத் துணையை... உடனடியாக தேடிக்கொடுப்பதும்தான் அவனுடைய உடனடி நடவடிக்கையாக இருந்ததால்... நல்லதையே நினைக்கத் தோன்றுகிறது.

"தம்பி, அம்மாவுக்கு திடிரென்று... கொஞ்சம் கடுமையாகி......"

"ஏன் மாமா.....? என்ன நடந்தது....?"

"இல்லத் தம்பி.... இதுகள் ஒன்றையும் கவனிக்கிற தில்லதானே. நல்லா முத்தின பிறகுதான்...."

"என்ன மாமா....?"

ராஜனுக்கு இந்த விடயத்தைப் பக்குவமாகச் சொல்லச் சிவம் மாமாதான் சரி என வீட்டிலுள்ளோர்

நினைத்து..., அவர் எடுத்ததும்... விளங்கிக் கொண்டது.

"அக்கா நீ இருக்கிற காலத்தில எப்பவாவது தனக்கு ஏதும் வருத்தம் என்று சொன்னவவே..? இப்போதும் அப்படித்தான். நெஞ்சுக்குள்ள குத்துகிறது என்று படுத்தவதான்...."

எப்படிச் சொல்வது என்று சிவம் மாமா தடுமாறுவதிலேயே. ராஜனுக்கு ஓரளவு புரிந்து விட்டது... அம்மாவுக்கு ஏதோ நடந்து விட்டது.....

"இப்ப தம்பி நாட்டின் நிலைமையும் சரி இல்லை.... நீயும் வந்து போறதென்றால் கஷ்டந்தானே..... உனக்கும் சிட்டிசன் கிடைக்கேல்ல... இனி....."

ராஜன் அழுவது அவருக்கு கேட்க..

"என்ன தம்பி செய்யிறது...? நாங்க நல்ல மாதிரி எல்லாம் செய்து போட்டம்..."

ஒரு மாதிரி விஷயத்தைச் சொல்லி.. முடித்துக் கொண்டார்.

அந்தக் குடும்பத்தைக் காக்கக் குடும்பத்தைப் பிரிந்து இவ்வளவு காலமும் ஜெர்மனியில் கஷ்டப்பட்டு இப்பதான் எவ்வளவோ செலவு செய்து கனடாவுக்கு போய்... கவலையோடு ராஜனைப் பற்றி நினைத்துக் கொள்கிறார். இந்த நிலையில் தாய் இறந்துவிட்டார் என்பதை சொல்வதென்பது தர்மசங்கடம் தான்.

சில பிள்ளைகள் ஊர் வந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதும் அந்தியேட்டி மட்டும் நின்று விட்டு போவதும் உண்டு. இவன் அப்படியும் வந்து போக முடியாத நிலைமை.

இன்னும் சிலர் வயது போன பெற்றோரை வந்து பார்த்து விட்டு செல்வதும் உண்டு.

ஏதோ அவன் உயிரோடு இருக்கும் போது வந்து போனவன் தானே என்று உறவுகளும் அயலும் சொல்வது தான் பிள்ளைகளுக்கு திருப்தி... ஏன் பெற்றோருக்கும் தான் சற்று ஆறுதல்.

மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்காகத்தானே... பேசப்படுவதற்கான வாழ்க்கையைத்தான்... வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ராஜனுக்கு தாயின் நினைவுகள்.....

'ஒரு நாள் தான் ஆறுவயதாயிருக்கும் போது கிணற்று விளிம்பில் இருக்கும் தும்பியைப் பிடிக்கும் ஆர்வத்தில்... தவறிக் கிணற்றுக்குள் விழ ஐயோ என்ரை பிள்ளை என்று குழறிக்கொண்டு தாயும் கிணற்றுக்குள் குதித்து....

பிறகு, அயலில் உள்ளோர் வந்து இருவரையும் வெளியில் எடுத்து..... கிணற்றுக்குள் பார்த்தால்.... பிள்ளையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு தாய்.....

அந்தக் கிணற்றுக்குள் தண்ணி குறைவு. பிள்ளை மூழ்கி... பிள்ளைக்கு ஏதாவது நடந்து விடும் என்ற நினைப்பைத் தவிர வேறு எதையும் தன் தாயால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

விளைவு, தண்ணீர் குறைவாக இருந்ததால் தாயின் கால்கள் கிணற்றுக்குள் உள்ள கல்லில் அடிபட்டு நடக்க முடியாத நிலை.

அயலவர்களும் உறவுகளும் 'அவசரப்பட்டு விட்டாய்... உனக்குத் தெரியும் தானே தண்ணி மட்டம், கீழே இருக்கும் கல்லு.... என்னென்னவோ சொல்லிப் பேசினார்கள்.

அம்மா என்னைக் காப்பாற்றுவதைத் தவிர நீ வேறு எதையும் யோசிக்கவில்லையே...

உன் ஆயுள்காலம் வரை உன் அருகில் இருந்து உன்னைப் பார்த்தெடுக்க முடியாத பாவி ஆகிவிட்டேனே..."

எப்படியோ விசயம் அறிந்து நண்பர்கள் ராஜனின் இருப்பிடத்திற்கு வந்து கூடிவிட்டனர்.

ராஜன் அப்பப்போ கூறிய கதைகளிலிருந்து குடும்ப நிலை பெரும்பாலும் மற்றவர்களுக்குத் தெரிந்து இருந்தது.

இப்படித்தான் ஏதாவது இழப்புகளின் போது வெளிநாட்டில் இருப்பவர்கள் அந்தத் துக்கத்தை அங்கேயே அனுஷ்டித்து கொள்வது வழக்கமாக மாறி விட்டது. சூழ்நிலையோடு பொருந்திப் போவதுதானே.. வேறுவழி..?

அயலில் இருக்கும் ஒரு சில ஊரவர்கள் வந்து துக்கம் விசாரித்துச் செல்கின்றனர்.

ஜேர்மனியில் நீண்ட காலம் இருந்ததால் பலர் தொலைபேசியினூடாகத் தொடர்பு கொண்டு துக்கம் விசாரிக்கிறார்கள்.

பிரித்தானியா, அமெரிக்கா என்று உயர் கல்விக்காகப் போனவர்களும் கட்டார், ஓமான், சவுதி எனப் போனவர்களும் இலண்டன், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பிரான்ஸ்... என இனப்பிரச்சினையால் சொந்த நாட்டில் இருக்க முடியாமல் உயிரைக் காப்பாற்றினால் போதுமென முற்காலத்தில் புலம்பெயர்ந்தோரும் திரைகடலோடித் திரவியம் தேடப் பிற்காலத்தில் புலம்பெயர்ந்தோருமென சரிக்குச்சரி வெளிநாட்டில் வாழும் நிலையில்... மாறி, மாறித் தொலைபேசி அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன.

– தொடரும்.....

# இலக்கிய மஞ்சரி

## விளம்பர இலக்கியம்



- ஆழியோன்




பொருட்கள், சேவைகள் தொடர்பான வர்த்தக முயற்சிகளுக்கு விளம்பரம் அவசியமாகக் காணப்படுகின்றது அல்லது அவசியமாக்கப்பட்டுவிட்டது. ஆரம்பகாலத்தில் சுவரொட்டிகள், பத்திரிகையில் வெளிவரும் விளம்பரங்களே ஆதிக்கம் செலுத்தியிருந்தன. அக்காலத்தில் திரைப்பட மாளிகை உரிமையாளர்கள் மாட்டுவண்டிகளில் தட்டிகட்டி, மேளம் அடித்து வீதி வீதியாக துண்டுப்பிரசுரம் கொடுத்துச் செல்வார்கள்: கூடவே படப்பெட்டியையும் கொண்டு செல்வார்கள். திரைப்படத்திற்கு "சனம் அள்ளும்".

காலப்போக்கில் விளம்பரங்களும் மாற்றம் அடைந்தன. மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் அன்றைய அரசினால் முழுப்பக்க விளம்பர மொன்று சகல மொழிப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது. அதுவோர் அட்டவணை போன்ற விளம்பரம். அரிசி, மா, சீனி, பருப்பு, பாண், டின்மீன், எரிபொருட்கள் மற்றும் அதுபோன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஒவ்வொரு நாட்டிலும் எவ்வளவு என்றும் இலங் கையில் எவ்வளவு என்னும் ஒப்பீடு அட்டவ ணையில் வெளியிடப்பட்டிருந்தது. உலக நாடுக ளில் இலங்கையின் விலையே மிகக் குறைவாகக் காணப்பட்டிருந்தது. இவ்விளம்பரத்தின் மாயையை அந்நேர மன்னார் தேர்தல் தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் சூசைதாசன் உடைத்துப் போட்டு விட்டார். அவர் கேட்ட ஒரேயொரு கேள்வி இது தான்: "விலை அட்டவணையில் உலக நாடுகளின் சம்பளத்தை ஏன் காட்டவில்லை?"

பின்னர் வந்த காலங்களில், பெரும்பாலான பண்டங்களின் விளம்பரங்களில் கவர்ச்சிகரமான பெண்களினையே பயன்படுத்தினர். சவர்க்காரம், ஆடைகள், நகை விளம்பரங்களில் மட்டுமல்லாமல் மருந்துப் பொருட்களுக்கான விளம்பரங்களில் கூட நீச்சலுடைப் பெண்கள் காணப்பட்டார்கள். ஒரு பிரபலமான பாதணி நிறுவனம் ஒன்று தனது "சப்பாத்துக்கான" விளம்பரமொன்றை பத்திரிகையில் வெளியிட்டி ருந்தது. அதில் மாணவன் ஒருவன் தனது ஒரு சப்பாத்துக் காலை புத்தகப் பையின் மேல் வைத்திருப்பது போல் ஒரு படம்: கீழே "முதலில் சப்பாத்து (அந்நிறுவனத்தின் பெயர்) .... பின்னர் பாடசாலை....." என்ற வாசகம். இலங்கை மக்கள், குறிப்பாக வடக்கு கிழக்கு மக்கள் கல்வியில் எவ்வளவு "பாசம்" வைத்திருந்தார்கள் என்பது நாம் அறிந்ததே! திடீரென எமது பகுதிகளில் அந்தக் கம்பனியில் பாதணிகளின் விற்பனையில் சரிவு ஏற்பட்டிருந்தது. புத்தகப்பையின் மேல் பாதணி அணிந்த காலை வைத்திருந்தமையை எம்மவர்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

உற்பத்திப்பொருட்களின் விலைகள் அதிகரிக் கப்படும்போது, அதிகரிப்பைக் குறிப்பிடாது வண்ணமயமான பத்திரிகை விளம்பரங்களையும் தொலைக்காட்சி விளம்பரங்களையும் காட்சிப் படுத்தி நாசுக்காக மக்கள் தலையில் பொருட் களை கட்டிவிடுகின்றார்கள். பழரசங்களில் பழங்களையே பிழிந்த சாறுசெய்வதாகக் காட்டுவார்கள்: சித்திரிக்கமிலம் கலக்கப்பட்டு, வண்ணங்கள் சேர்க்கப்பட்டு, காபனிக்கமிலங்கள் சேர்மானமாக்கப்பட்ட ரசங்களே சந்தையில் காணப்படுவதனை மறைத்துவிடுகின்றார்கள்; மக்களும் மறந்துவிடுகின்றார்கள்.

இன்னும் சில நிறுவனங்கள் தமது விளம்ப ரங்களில் சமூக நலச் செய்திகளையும் சொல்லத் தொடங்கியிருக்கின்றார்கள். குறிப்பாக இந்திய விளம்பரங்களில் இத்தன்மை காணப்படத் தொடங்கியுள்ளது. உதாரணமாக இந்தியாவின் பிரபல்ய சவர்க்கார விளம்பரம் ஒன்றில். தாயானவள் மகளை தற்காப்பு பயிற்சிக்கு அனுப்புகிறாள்; பின்னர் அவளைத் தனியாக வகுப்புகளுக்கு அனுப்புகின்றாள். இது ஒரு சமூகப்

பொறுப்பு செய்திதான். இதைவிடுத்து, சுவரையும், கண்ணாடியையும் உடைத்துக்கொண்டுவந்து பற்பசையில் உப்புண்டா? புளியுண்டா? என்றெல்லாம் கேட்கின்றார்கள். இதைப் பார்க்கும்போது எம் பிதாப்பிதாக்கள் ஞாபகத்திற்கு வருகின்றார்கள். அவர்கள் உப்பையும், வேப்பம் குச்சியையும், ஆலம் தடியையும் பாவித்து பற்கள் துலக்கி ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இன்னமும் "கோபால் பற்பொடி" பாவிப்பவர்கள் எம்மிடையே உள்ளார்கள் அல்லவா? தடைசெய்யப்படவேண்டிய பாக்குத்தூள்களுக்கு பெரிய பெரிய நடிகர்களே விளம்பர "மொடல்களாக" இருப்பது இன்னும் கவலையாக உள்ளது. •••

மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்காக

இம்மாதம் 26ம் திகதி

குருவாக திருநிலைப்படுத்தப்பட இருக்கின்ற

## திருத்தொண்டர்கள்

### திருத்தொண்டர் அல்பிரட் அலன்ராஜ்



**பிறப்பு** : 1992.03.28
**தாய்** : அல்பிரட் செபமாலை மேரி
**தந்தை** : பொன்னையா அல்பிரட்
**பங்கு** : தன்னாமுனை

### திருத்தொண்டர் செபமாலை எட்வெட் செல்வராஜ்

**பிறப்பு** : 1992.09.29
**தாய்** : இன்னாசி அமலோற்பவ மேரி
**தந்தை** : மிக்கேல் செபமாலை
**பங்கு** : சொறிக்கல்முனை



### திருத்தொண்டர் பிரான்சிஸ் கிறிஸ்டிராஜ்



**பிறப்பு** : 1991.10.11
**தாய்** : பிரான்சிஸ் கிறிஸ்டீனா
**தந்தை** : அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்
**பங்கு** : புளியடிக்குடா

## சமையல் டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

- தயிர் வடை போன்றே தயிர் இட்லியும் செய்யலாம்! தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், முந்திரிப்பருப்பு, கொத்தமல்லித்தழை ஆகியவற்றை அரைத்து தேவையான தயிரும், உப்பும் சேர்த்து வைக்கவும். இட்லிகளை சதுரமான துண்டுகளாக்கி, இந்தக் கலவையில் சில நிமிடங்கள் ஊறவைத்துப் பரிமாறினால், மணம், சுவை நிறைந்ததாக இருக்கும். விருப்பப்பட்டால், கேரட் துருவலை யும் மேலே தூவலாம்.
- வாழைப்பூவை சமையலுக்கு பயன்படுத்தும்போது மோர் கலந்த தண்ணீரில் பொடியாக நறுக்கிப் போட்டு, பின் அதை ஜல்லி கரண்டியால் அரித்தெடுத்து இட்லி பானையில், இட்லி வேகவைப்பது போல் வேகவைத்தெடுத்தால், பூ கறுக்காமல் இருக்கும்.

## வினா விடைப் போட்டி - இல 34

### சரியான விடைகள்

1. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அனைத்து வடிவ மான வன்முறைகளும் குறிப்பாக குடும்பங்களுக்குள் ஏற்படும் வன்முறைகளும்.
2. அவரது பிறந்த நாளான யூலை 18ம் திகதி
3. * கடவுளின் கட்டளைகள் எழுதப்பட்ட இரு கற்தூண்கள்
 * 10 கட்டளைகள்
 * மன்னா - பாலை நிலத்தில் அலைந்து திரிந்த போது இறைவனால் வழங்கப்பட்ட உணவு .
4. Omar al Bashir
5. மரியா அழியாத உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதை
6. வயித்தி அந்தோனி இராசரத்தினம்
7. 42,194 ஆகும்
8. மகிமைத் திருச்சபை
 துன்புறும் திருச்சபை
 திருப்பயணத் திருச்சபை
9. பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இசவெல்லே டீ செனில்ஹஸ் (Isabelle De Senilhes) என்ற ஓவியர்
10. ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்புப் பணி

***சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:***

- **P. கேயூஸ்,** இல. 6/16, வெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு.
- **பீ. ஐ. கைடி பொன்கலன்,** 24/11, 1ம் குறுக்கு, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.
- **M. A.W. பற்றிக்,** ஷாலோம், அம்பாறை வீதி, அக்கரைப்பற்று.


பங்குபற்றியோர் - 08 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 06 பேர்

## உன்னை மறந்துவிடு!

*"ஒருவேளை நீ கடவுளைப்பற்றி நினைக்காததற்கு முதல் காரணம் நீ உன்னைப் பற்றியே அதிகம் நினைத்துக்கொண்டிருப்பதாக இருக்கலாம். ஒரு நிமிடம் உன்னையே மறந்துவிடு. அப்போது இறைவன் உன்னோடு பேசுவதைக் கேட்பாய்"*

# தொப்பையைக் குறைக்க

## சிறந்த வழிகள்!



**தி**னமும் அனைவரும் கண்ணாடியை பார்க்கும் போது, முதலில் முகத்தைப் பார்த்தப் பின் வயிற்றைத் தான் பார்ப்போம். அப்படி எப்போ தெல்லாம் கண்ணாடியைப் பார்க்கிறோமோ, அப்போதெல்லாம் அனைவரது முகமும் சுருங் கும். உடலுக்கு ஏற்ற வயிறு இல்லாமல், வயிறு வீங்கி இருப்பதாலே ஆகும்.

அதே சமயம் அனைவரது மனதிலும் இனிமேல் நாம் கடுமையான டயட்டை பின்பற்றி, ஒல்லியாக மாற வேண்டுமென்ற எண்ணமும் எழும். ஆனால் சிலரைப் பொறுத்தவரை அது வெறும் பேச்சாக இருக்கும். சிலரோ சரியாக சாப்பிடாமல், உடலுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைக்காதவாறு டயட் இருப்பார்கள்.

ஆனால் அப்படி கடுமையான டயட் இல்லாமல், மிகவும் சுலபமாக, டயட்டில் இருப்பது தெரியாதவாறு, எப்போதும் இருப்பது போல் சாதாரணமாக இருந்தாலே தொப்பையை குறைக்க லாம். அதற்கான சில வழிகளைக் காண்போம்.

- நல்ல தூக்கத்துடன், தூங்கும் போது குப்புறப் படுத்து தூங்குங்கள். இதனாலும் தொப்பை குறையும்.
- உணவில் சேர்க்கும் உப்பின் அளவைக் குறைக்க வேண்டும். ஏனெனில் அதிகப்படியான உப்பு உடல் ஆரோக்கியத்திற்கு கெடுதலை விளைவிப்பதோடு, தொப்பையை குறைக்க தடையாக இருக்கும்.
- உணவில் பச்சை காய்கறிகளை அதிகம் உட்கொள்ளுங்கள். அதிலும் ப்ராக்கோலி, பாகற் காய் மற்றும் முட்டைக்கோஸ் ஆகிய வற்றை ஜூஸ் போட்டு குடித்து வந்தால், உடல் எடை விரைவில் குறைவதோடு, தொப்பையும் குறையும்.
- கொழுப்புள்ள உணவுகளை அறவே தொடக் கூடாது. குறிப்பாக சிப்ஸ், பர்க்கர், பிரெஞ்சு ப்ரைஸ் போன்றவற்றை மறக்க வேண்டும்.
- நேரம் கிடைக்கும் போது தொப்பையை குறைக்கும் உடற்பயிற்சிகளை செய்ய வேண்டும். அதிலும் இடுப்பை பக்கவாட்டில் வளைப்பது, வயிற்றை முன்புறம் அழுத்துவது போன்ற பயிற்சிகளை செய்து வந்தால், தொப்பை குறையும்.



- தினமும் தியான நிலையில் 30 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்து வந்தாலும், தொப்பை குறைய ஆரம்பிக்கும்.









- தண்ணீரை அதிகம் குடிக்க வேண்டும். தண்ணீர் அதிகம் குடித்தால், நிச்சயம் 2 வாரங்களில் தொப்பை குறையும். எப்படியெனில் தண்ணீர் அதிகம் குடித்தால், அடிக்கடி பசி ஏற்படாமல் இருக்கும். இதனால் உடலில் கொழுப்புக் களின் சேர்க்கை குறைவதோடு, உடலில் தங்கியுள்ள தேவையற்ற நச்சுக்களும் வெளியேறிவிடும்.
- நார்ச்சத்துள்ள உணவுகளை டயட்டில் சேர்த்து வந்தால், தொப்பை கரையும். அதிலும் ஓட்ஸ், ரொட்டி, ப்ரௌன் பிரட் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



## Tonga தீவு மக்களுக்கு unicef அமைப்பின் அவசரகால உதவி

ஜனவரி மாதம் 15ம் திகதி பசிபிக் பெருங்கடலில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பாலும், அதன் விளைவாக ஏற்பட்ட சுனாமி, மற்றும் கடும்புகையாலும் 36,500 குழந்தைகள் உட்பட 85,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அவர்களுக்கான அவசரகால உதவியாக 10,000 கிலோ பொருள்கள் அனுப்பப்படுவதாக unicef அறிவித்தது.

ஆஸ்திரேலியாவிலிருந்து கப்பல் வழியாக அனுப்பப் படும் இவ்வுதவி, இன்னும் ஒருவாரத்திற்குள் Tonga தீவை சென்றடையும் எனவும், அதில் குடிநீர், சுகாதார தொடர்புடையவைகள், குழந்தை களுக்கான விளையாட்டுப் பொருள்கள் ஆகியவை அடங்கியுள்ளதாகவும், unicef எனும் குழந்தை களுக்கான ஐ.நா.வின் அவசரகால நிதியமைப்பு அறிவித்துள்ளது.

நிலத்தடி நீரையே நம்பி இருக்கும் Tonga தீவு மக்கள், இவ்வியற்கைப் பேரிடரால் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, 27 இலட்சம் டாலர்கள் உதவிக்கு விண்ணப்பித்துள்ளது unicef அமைப்பு

■■■■



## எத்தியோப்பியாவின் வான்வழி தாக்குதல்

எத்தியோப்பியாவின் வடக்கு Tigray பகுதியில் நடத்தப்பட்ட வான்வெளி தாக்குதலில் 17 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமுற்றனர் எனவும், இறந்தவர்களில் பலர் மாவு மில்லில் வேலை செய்து கொண்டிருந்த பெண்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
எத்தியோப்பிய இராணுவத்தின் இந்த வான்வழித் தாக்குதல் நடந்த அதேநாளில், அமெரிக்க அரசுத் - தலைவர் ஜோ பிடன் அவர்கள், தனது எத்தியோப் பியப் பிரதிநிதியான அபி அஹ்மதை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு, பொதுமக்களின் உயிரிழப்புகள் மற்றும் வான்வழித் தாக்குதலால் ஏற்பட்டுள்ள துன்ப துயரங்கள் குறித்து தனது ஆழ்ந்த கவலையை எழுப்பியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போதிய செய்தித் தொடர்புகள் இல்லாததால், இந்தத் தாக்குதலில் எத்தனைபேர் இறந்தார்கள் என்பதை சரியாக அறியமுடியவில்லை என்று ஐ.நா. அமைப்பும் கவலை தெரிவித்துள்ளது.


ஜனவரி 10ம் திகதியன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திக்கானுக்கான அரசியல் தூதர்க ளுக்கு வழங்கிய உரையில், எத்தியோப்பியாவில் நிகழ்ந்துவரும் உள்நாட்டு மோதல்கள் குறித்துத் தனது கவலையை வெளிப்படுத்தியதோடு, "எல்லா வற்றிற்கும் மேலாக, மக்களின் தேவைகளை முன்வைக்கும் நேரடியான சந்திப்பின் மூலம் ஒப்புரவு, நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கான பாதையை மீண்டும் ஒருமுறை கண்டறிய வேண்டிய அவசியம் உள்ளது" என்று தெரிவித்திருந்தார்
ஏறத்தாழ, ஓர் ஆண்டிற்கும் மேலாக நீடித்துவரும் இந்த உள்நாட்டுப் போரானது, பேரழிவு தரும் மனிதாபிமான நெருக்கடியையும் பரவலான பஞ்சத்தையும், வறுமையையும் உருவாக்கியுள்ளது என்றும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

■■■■

# திருஅவைச் செய்திகள்

### திருத்தந்தையின் உலக சமூகத் தொடர்பு நாள் செய்தி

'வந்து பாருங்கள்' என்ற தலைப்பில் கடந்த ஆண்டின் உலக சமூகத் தொடர்பு தினத்திற்கு செய்தி வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டிற்கான அத்தினத்திற்கு 'இதயத்தின் காது கொண்டு செவிமடுத்தல்' என்ற தலைப்பில் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார். கடந்த ஆண்டு 'பார்வை' பற்றி பேசிய தான், இவ்வாண்டு 'செவிமடுத்தல்' பற்றி பேசுவதற்குக் காரணம், சமூகத் தொடர்பில் உண்மையான கலந்துரையாடல் என்பது முக்கிய நிபந்தனையாகும் என தன் செய்தியை துவங்கியுள்ளார் திருத்தந்தை. மே மாதம் 29ம் தேதி சிறப்பிக்கப்படும், 56வது உலக சமூகத் தொடர்பு நாளுக்கான செய்தியை, கத்தோலிக்க சமூகத் தொடர்புகளின் பாதுகாவலர் புனித பிரான்சிஸ் தே சேல்ஸ் அவர்களின் திருவிழாவான ஜனவரி 24ம் திகதியன்று வெளியிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய சூழல்களில் செவிமடுத்தலின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்ற போதிலும், பலவேளைகளில் மனிதகுலம் செவி கொடுப்பதைத் தவிர்த்து வாழ விரும்புகின்றது என்ற கவலையை அதில் வெளியிட்டுள்ளார்.




# கனவுலகவாசிகள்

'குடிமகன்'

இலங்கையின் பொருளாதார, அரசியல் ஸ்திரத்தன்மை மோசமடைந்து வருவதாக பன்னாட்டு ஊடகங்களும் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. கனடா தன் நாட்டுப் பிரஜைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இலங்கையில் மருந்து தட்டுப்பாடு உள்ளதாகவும் இலங்கை செல்லவுள்ள கனடியப் பிரஜைகள் அது தொடர்பாக அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும் எச்சரித்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன் பி.பி.சியில் தமிழ் தொலைக்காட்சி செய்தியறிக்கையில் இலங்கையில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இலங்கையரசு இவற்றிற்கெல்லாம் மறுப்பறிக்கை விட்டிருந்தாலும் இங்கு வாழும் நமக்கும், இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் உண்மை விளங்கும்தானே!

தொலைக்காட்சிகளில் நமது விவசாயிகளின் கண்ணீர், எமது நெஞ்சங்களை வலிக்கச் செய்கின்றது. வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாக ஒருவர் கூறுகின்றார்; கனவுலக வாசிகள். ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இன்னும் இரண்டு வருடங்கள் நீடிக்க வேண்டும் என்று ஒரு "நங்கணம்" சொல்லுகின்றது.

கடந்த அரசு மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைத்ததை கடுமையாகச் சாடிய இவ்வரசு, நாசுக்காக உள்ளூராட்சித் தேர்தல்களைத் தள்ளிவைத்துவிட்டது. "அவர்கள் செய்தால் பிழை; அதையே இவர்கள் செய்தால் நியாயம்". எப்படியிருக்கிறது இந்த நியாயம்? உள்ளூராட்சிமன்றங்களின் ஆயுட் காலத்தை ஒரு வருடம் நீடித்ததால், தாம் "விசேட ஆணையாளராக" வரலாம் என்ற கனவு கண்டிருந்த சில ஆணையாளர்களின் கனவுகள் - நம்மவர்கள் உட்பட - தவிடு பொடியாகிவிட்டன.

இந்தியாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 'இது இரசாயன உரம் கொண்டு விளைவிக்கப்பட்டதா?' என்று ஊடக சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சரவையில் ஊடகப் பேச்சாளர் தடுமாறி மற்ற அமைச்சரிடம்தான் கேட்க வேண்டும் என்று சொல்கின்றார். உங்கள் விளையாட்டுக்கெல்லாம் நாங்கள்தான் பலிக்கடாவா?

உச்சத்திலிருப்பவர் விடும் அறிக்கைகள் எல்லாம் ஒரு சில விடயங்களை மட்டும்தான் தொட்டுச் செல்கின்றன. சிறுபான்மையினத்தவர், வறுமைக்கோட்டின்கீழ் வாழ்பவர்கள் போன்றவர்கள் பற்றி எதுவும் சொல்லப்பட்டிருக்காது. எழுதிக்கொடுப்பவர்கள்தான் இதற்கு காரணமா...? ஒரு கதையொன்று ஞாபகம் வருகின்றது, ஒரு அரசியல்வாதி தனது உதவியாளரிடம் ஐந்து நிமிடப் பேச்சொன்றை ஆயத்தம் செய்துதரும்படிக் கேட்க, அவரும் எழுதிக்கொடுத்திருக்கின்றார். ஆனால் அரசியல்வாதி பதினைந்து நிமிடம் மேடையில் அதை வாசித்துவிட்டு, "5 நிமிட உரையைக் கேட்க ஏன் 15 நிமிட உரையை ஆயத்தம் செய்தாய்?" என்று உதவியாளரிடம் கேட்டுள்ளார். அதற்கு உதவியாளர் அமைதியாகப் பதில் கூறினார், "நீங்கள் இரண்டு காபன் பிரதிகளையும் சேர்த்து வாசித்து விட்டீர்கள்....

அரசியலில் சந்திரிக்கா இன்னுமொரு வியூகம் அமைப்பதுபோல் தெரிகின்றது. ஏனைய கட்சிகளின் அதிருப்தியாளர்கள் அவரின் பின்னால் அணிதிரள்வதுபோல் விளங்குகின்றது. முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவை முன்னிறுத்தி ஆட்டம் ஆரம்பமாகப்போகிறதாம். என்ன நடந்தாலும் நமக்கு என்னவாகப்போகின்றது? "சமாதானத்திற்காக யுத்தம்" செய்தவர்தானே சந்திரிக்கா அம்மையார். அட .... யுத்தத்திற்கெல்லாம் எப்படியெல்லாம் பெயர் வைத்தார்களப்பா....? எண்சாத்திரக்காரங்கள்,

சோதிடர்கள் எல்லாம் தோற்றுப் போய் விட்டார்கள்.

ஏனையவர்களைப் போட்டுக் குழப்பிய ஆ.சங்.... தனது அணியினரால் தானே குழம்பிப் போய் உள்ளார். இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு ஒரு கோடி ரூபாவை இந்தியாவிடம் இருந்து பரிசாகப் பெற்றவர். ஏன் அந்தப் பரிசு என்று அவருக்குத்தான் தெரியும்.

மலையக மக்களும் இலங்கையர் தான் என்று ஒரு இராஜாங்க அமைச்சர் கூற, மலையக மக்களுக்கும் தனித்துவம் உண்டு. முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவர் புலம்புகின்றார். அவர் பதவியில் இருந்தபோது என்ன செய்தார் என்று அவருக்குத் தெரியும்தானே....! ■ ■


## கவிஆரம்!

*காலையில்*
*கண் விழித்தவுடன்,*
*கடன்காரன்*
*வருகிறான்.*
*கடன் காரனை*
*கண்ட வுடன்,*
*வார்த்தைகளால் - அவனை*
*வழி அனுப்பி*
*வைத்தும் - அவன்*
*வருகிறான்.*
*இப்படி அவன்*
*வந்து வந்து போய்,*
*வாசலில் மண் இல்லை*
*ஆனால் அவன்*
*இன்னும் வருகிறான்.....*



**கடன்காரன்**
**வருகிறான்**

– *மகரிஷி சிவலிங்கம்*



## இனியது இயற்கை:

## ஒரு சொட்டு தண்ணீரில் பல கோடி மூலக்கூறுகள்

நிலம், நீர், காற்று, வானம் என, இறைவனின் படைப்புக்கள் ஒவ்வொன்றும், அவற்றில் வாழ்கின்ற உயிரினங்கள் ஒவ்வொன்றும், நம்மை வியப்பின் உச்சிக்கே இட்டுச்செல்கின்றன. நிறமற்றும், சுவையற்றும் உள்ள நீர் பற்றி அறிய அறிய, அதன் பண்புகள் நம்மை அசரவைக்கின்றன. அதைவிட அதன் மூலக்கூறுகளை அறிந்துகொள்வது மிகவும் கடினம். ஒரு சொட்டு தண்ணீரில் பல கோடி மூலக்கூறுகள் உள்ளன. அதனால்தான், இலண்டன் இம்பீரியல் கல்லூரியின் அறிவியல் எழுத்தாளர் டாக்டர் ஜான் எம்ஸ்லி அவர்கள், "தண்ணீர் மூலக்கூறைப் பற்றி ஏராளமாக ஆராய்ச்சி செய்தாயிற்று. ஆனாலும் அதைப் பற்றி அவ்வளவாக தெரியவில்லை" என்று, தண்ணீரைப் பற்றி கூறுகிறார். நியூ சயன்டிஸ்ட் *(New Scientist)* என்ற வார இதழ், "இந்தப் பூமியில் தண்ணீரைப் பற்றி தெரியாத மனிதரே இருக்க முடியாது. அதே தண்ணீரின் மர்மங்கள் எல்லாம் தெரிந்த மனிதரும் இருக்க முடியாது" என்று கூறியுள்ளது. தெரியாததவை தெரிவிக்கும் உண்மைகள் என்ற நூலில் தண்ணீரின் தன்னிகரற்ற தன்மை பற்றி விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. "தண்ணீரின் தன்மை நமக்கெல்லாம் தண்ணீர் காட்டுகிறது. $H_2O$ என்றாலே அது வாயுவாக இருக்க வேண்டும். ஆனால் நீர்மமாக உள்ளது. அது உறைந்து, பனிக்கட்டி என்ற திடநிலையை அடைகிறபோது, தண்ணீரில் மூழ்குவதற்கு பதில் அது மிதக்கிறது" என்று, டாக்டர் எம்ஸ்லி அவர்கள் எளிய மூலக்கூறை உடைய தண்ணீரைப் பற்றி வியந்து கூறியுள்ளார். அமெரிக்க அறிவியல் முன்னேற்ற கழகத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் பால் ஈ. கலாப்ஸ்டெக், தண்ணீரின் தன்னிகரற்ற தன்மையைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார். "தண்ணீர் உறைந்ததும் மேலே மிதப்பதால் அடியில் இருக்கும் மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்கள் வாழ முடிகிறது. தண்ணீர் உறைந்ததும் மிதக்கவில்லை என்றால் மெல்ல மெல்ல ஏரியில் உள்ள தண்ணீர் முழுவதும் பனிக்கட்டியாக மாறி, நீர்வாழ் உயிரினங்களை எல்லாம் கொன்றுவிடும்." ஆகவே "காரண காரியங்களை சிந்திக்கக்கூடிய அபார அறிவுபடைத்த படைப்பாளரே இந்தப் பிரபஞ்சத்தை படைத்திருக்க வேண்டும் என்பதற்கு தண்ணீரின் தன்னிகரற்ற தன்மையே சான்று" என்றும் டாக்டர் கலாப்ஸ்டெக் அவர்கள் கூறியிருக்கிறார்.

– வத்திக்கான் செய்திகள் –




## நலம் பெறுவீர்

உறக்கமின்றி உழைத்தாலும்
உண்ணும் உணவுக்கு ஆகாது - இனிச்
சிறக்கும் வாழ்வு என நம்பிச்
சிந்தையிற் கனவுடன் வாக்களித்து
பறக்கும் துயரங்கள் வாழ்வினிலே
பசுமை செழித்திடும் நாட்டிலென
உறக்கம் முழுதும் கனவு கண்டோம்
ஒரு துளிப் பசுமையும் துளிர்க்கலையே!

தன்நலம் காத்திடும் மன்னர்களின்
தலைமுறைத் தொடராய் ஆட்சி வலம்
இன்னல்கள் ஆயிரம் மக்களுக்கு
ஏதினித் துயர்களை மாற்றவழி!
மன்னர்கள் இருப்பைத் தானகற்ற
மக்கள்தான் ஒன்றாய் இணைந்திடனும்,
அன்னம் பிசைந்து நாமுண்டு
அவலம் அறுத்து மலர்ச்சி கொள்வோம்!

ஒற்றுமை ஒன்றே எமது பலம்
உழைப்பே என்றும் வாழ்வின்வளம்
கற்றவர், நல்லுளம் கொண்டவர்கள்
கடமை உணர்வினில் நிறைந்தவர்கள்
பற்றொடு மக்கள்தம் வாழ்வுயரப்
பணிசெய்ய வருங்கால் ஏற்றிடுவீர் .....
அற்புதமானநம் இறை அருளை
அகத்தினிற் கொண்டே நலம் பெறுவீர்!

அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



## யார் முட்டாள்...?

நாட்டை ஆண்டுகொண்டிருந்த மன்னருக்கு திடீரென ஒரு சந்தேகம் உதித்தது. உடனடியாக அமைச்சரை வரவழைத் தார். "நான் இந்த நாட்டை இவ்வளவு நன்றாகவும், புத்திசாலித்தனத்துடனும் ஆண்டு வருகிறேன். ஆனால் இந்த நாட்டிலும் முட்டாள்கள் இருப்பார்கள் அல்லவா? அவர்களில் முதல் நான்கு முட்டாள்கள் யார்? அவர்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கூட்டிக்கொண்டு வருவது உம் பொறுப்பு" என்றார். அமைச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை. புத்திசாலியைக் கொண்டுவரச் சொன்னால் ஏதாவது போட்டி வைத்து வெற்றி யாளரைக் கொண்டு வரலாம். முட்டாளைக் கொண்டுவரச் சொன்னால்... என்ன செய்வது. சொல்வது மன்னராயிற்றே! "சரி மன்னா" என்று ஒத்துக்கொண்டார் அமைச்சர். ஒரு மாதம் நாடு முழுவதும் பயணம் செய்து இரண்டுபேரை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் மன்னர், "அமைச்சரே உமக்கு கணிதம் மறந்து விட்டதோ...?" "இல்லை மன்னா! நான் நாடு முழுவதும் சுற்றும்போது, இவன் மாட்டு வண்டியின்மேல் அமர்ந்துகொண்டு தன் துணி மூட்டையைத் தலைமேல் வைத்து பயணம் செய்து கொண்டிருந்தான். ஏன் அவ்வாறு செய்கிறாய்? எனக் கேட்ட தற்கு என்னைச் சுமந்து செல்லும் மாடுகளுக்கு வலிக்கக் கூடாதல்லவா? அதற்குத்தான் என்றான். எனவே இவன்தான் நம் நாட்டின் நான்காவது மிகப் பெரிய முட்டாள்" என்றார் அமைச்சர். "சரி அடுத்து..." "இதோ இவன் தன் வீட்டுக் கூரைமேல் வளர்ந்த புல்லை மேய்க்க, எருமையைக் கூரை மேல் இழுத்துக் கொண்டிருந்தான். இவன்தான் நம் நாட்டின் மூன்றாவது மிகப் பெரிய முட்டாள்". "களிப்படைந்தோம் அமைச்சரே! களிப்படைந்தோம்! சரி எங்கே அடுத்த முட்டாள்?" "அரசவையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கும்போது, அதையெல்லாம் விட்டுவிட்டு முட்டாள்களைத் தேடி, கடந்த ஒரு மாதமாய் அலைந்துகொண்டிருந்த நான்தான் இரண்டாவது முட்டாள்". மன்னருக்குச் சிரிப்பு தாங்கவில்லை. விழுந்து விழுந்து சிரித்தார். "சரி எங்கே முதலாவது முட்டாள்?" அமைச்சர் சொன்னார். "நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும்போது அதைக் கவனிக்காமல் முட்டாள்களைத் தேடிக்கொண்டிருக்கும் நீங்கள்தான் முதலாவது...." என்றார் அமைச்சர். ஒரு நிமிடம் அரசவையே ஆடிவிட்டது. யாரும் எதுவும் பேசவில்லை. ஆனால் மன்னரோ, "உமது கருத்தி லும் நியாயம் உள்ளது. நான் செய்ததும் தவறுதான்" என ஒத்துக் கொண்டார்.

# அதர்மத்தோடு நாங்கள் பேசுவதில்லை

அதர்மத்தோடு நாங்கள்
பேசுவதில்லை!
ஏனென்றால் நாங்கள்
தர்மத்தின் குழந்தைகள்!

சமாதானம்
எங்களின் இதயத்தில்
பூப்பதால்
அங்கே
அவமானம் காய்ப்பதில்லை!

ஒருபிடிச் சாம்பலில்
முடிவாகப் போகின்ற
உடலுக்குள்
இனவெறி
மொழி வெறி
அடிபிடிச் சண்டைகள்
எதையுமே
வாடகைக்குக் கூட
வந்திருக்க விடமாட்டோம்!

ஏனென்றால் நாங்கள்
காடையர்களின்
கருவில்
கண்மலராதவர்கள்!

நாளைய விடியலிலும்
நாங்கள்
ஆளையாள் சந்திக்கும்போது
வாள்கொண்டு மோதாமல்
தோளோடு தோள் சேர்த்து
வாழ விரும்புகிறோம்!

ஆதலினால்
"எங்களை நீங்கள்
கோழைகளே!"
என்று மட்டும்
கூப்பிடாதீர்கள்
ஏனென்றால் நாங்கள்
இறைவனுக்குப் பயந்த
ஏழைகள்!

**– செ. குணரத்தினம்**
– 1985 ஆடி தொண்டன் –



## அன்புள்ள மகனுக்கு ...

இந்த உலகில் இன்றியமையாதது என்று ஒன்று இல்லை. உனக்கு உடமையானது என்று எதுவும் இந்த உலகில் இல்லை. இந்த கூற்றினை நீ புரிந்து கொண்டாய் என்றால், உன்னை சுற்றி மனிதர்கள் சூழ்ந்திருந்தாலும், எவரும் தேவை இல்லை என்றாலும் அல்லது நீ அதிகமாக விரும்பிய ஒன்றையோ / ஒருவரையோ நீ இழக்க நேர்ந்தாலும் உன் வாழ்க்கையை நீ எளிதில் வழி நடத்திச் செல்ல இயலும்.

வாழ்கை என்பது மிகவும் குறுகிய காலத்திற்கு உட்பட்டது. இன்றைய வாழ்க்கையை நீ வீணடித்தாய் என்றால் உன் வாழ்க்கை உன்னைவிட்டு சென்றுவிட்டதை நாளை நீ கண்டுகொள்வாய். வாழ்க்கையின் மதிப்பினை நீ எவ்வளவு விரைவில் உணர்ந்து கொள்கிறாயோ ஓரளவாகிலும் நீ வாழ்வினை அனுபவிப்பாய்.

■■■ படித்ததில் பிடித்தது....

## முட்டாள்...!

ஒருமுறை ஹென்றிவார்ட் பாதிரியார், 'களிமத்தே' என்ற ஆலயத்தில் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்த சமயத்தில் உறையிட்ட கடிதமொன்று அவருக்கு வந்தது. 'முட்டாள்" என்ற ஒரே வார்த்தைதான் அதில் இருந்தது. பாதிரியாரிடம் பகைமை கொண்ட யாரோ எழுதிய கடிதம் அது. பாதிரியார் மிகவும் அமைதியாக அக்கடித விடயத்தை கூட்டத்தினருக்கு அறிவித்தார்.

"அநேகர் கடிதம் எழுதிக் கையெழுத்திட மறந்திடுவர். ஆனால் இந்த ஆசாமியோ கடிதத்தை எழுத மறந்து விட்டு கையெழுத்தை மட்டும் போட்டிருக்கிறார். விந்தையாக இருக்கிறதல்லவா...?" என்று கூறினார்.

**- நம் வாழ்வு -**

"பயனில்லாச் சொற்கள் ஓர் ஆயிரத்திலும் பார்க்க கேட்டதும், நெஞ்சைக் குளிர்விக்கும் பயனுள்ள ஒரு வாக்கியமே மிக நன்றாம்"

**- புத்தர் -**



**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

# வினாவிடைப் போட்டி இல. - 36

1) பர்த்திமேயுவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள் என்ன?

2) மனிதன் தன்னோடு ஒன்றிப்பைக் காணவேண்டுமென்றால் எவ்வாறு செயற்பட வேண்டும்?

3) பிரபல பொருளாதார மேதை "முகமது யூனுஸ்" எந்த நாட்டவர்?

4) கடவுளைப் பற்றி இத்தாலி நாட்டு பழமொழி கூறுவது என்ன?

5) கடந்த 2021ம் ஆண்டு "குழந்தைகள் ஒழிப்பு அனைத்துலக ஆண்டாக கடைப்பிடிக்கப் பட்டதாக கூறிய திருப்பீடத்தின் பிரதிநிதி யார்?

6) இந்தியாவின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருதைப் பெற்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் யார்? அவர் எந்த மாநிலத்தை சேர்ந்தவர்?

7) கூட்டொருங்கியத் திருஅவையில் "பங்கேற்பு" என்பது எதனைக் குறிக்கின்றது?

8) கபிரியேல் தூதர் மரியாவுக்கு தோன்றி கூறிய வார்த்தைகள் என்ன?

9) அன்னை தெரேசாவுக்கு புனிதர் பட்டம் எப்போது யாரால் வழங்கப்பட்டது?

10) மியன்மார் நாட்டின் கர்தினால் யார்?

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

பங்கு / தொ.பே.இல : ..............................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..............................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 36**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 28.02.2022



திருவிவிலியம் கற்போம் 214

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி

**28.02.2022**

**சரியான விடைகளை 1 எபிரேயர் 8-13 ஆகிய அதிகாரங்களில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. ஆண்டவர் யாரோடு புதிய உடன்படிக்கையைச் செய்துகொள்வேன் எனக் கூறினார்?

   ..........................................................................................................................

2. ஆண்டுகளுக்கு ஒருமுறை தலைமைக் குருக்கள் மட்டுமே செல்லும் கூடாரம் எது? அக்கூடாரத்தின் பெயர் என்ன? ..........................................................................................

   ..........................................................................................................................

3. மோசே கன்றுக்குட்டிகள், வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தத்தை தண்ணீரோடு கலந்து, எதனால் தெளித்தார்? ..............................................................................

4. என் கடவுளே உமது ................................................ நிறைவேற்ற இதோ வருகின்றேன். என்னைக் குறித்து ............................................. சுருளில் எழுதப்பட்டுள்ளது.

5. இயேசின் உடலை எதற்கு ஒப்பிடலாம் எனக் கூறுகிறார்?

   ..........................................................................................................................

6. நம்பிக்கையினால் சாவுக்குட்படாதபடி கடவுளால் எடுத்துக்கொள்ளப்பட்டவர் யார்?

   ..........................................................................................................................

7. ஆபிரகாம் சோதிக்கப்பட்டபோது கடவுள் அவருக்கு அருளிய வாக்குறுதி என்ன?

   ..........................................................................................................................

8. எந்தப் பாவத்தையும் உதறி தள்ளிவிட்டு நமக்கு குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் ............. .................................................... ஓடுவோமாக.

9. ஒருவேளை உணவிற்காகத் தம் தலைப்பேற்று உரிமையை விற்றவர் யார்?

   ..........................................................................................................................

10. எபிரேயர் 13:8 திருவசனம் கூறுவது:

    ..........................................................................................................................

**பெயர் :** ....................................................

**முகவரி :** ..................................................

..................................................

..................................................

**பங்கு / தொ.பே.இல :** ..............................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** ....................

............................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**திருவிவிலியம் கற்போம் - 214**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 212 விடைகள்**

1. மோசேயின் சட்ட நூலில்
2. நீதி வழங்க தேவையான ஞானத்தை
3. நீரின் மன்னர் ஈராம்
4. யாக்கின், போவாசு
5. 22,000 காளைகளையும், 124,000 ஆடுகளையும்
6. பொட்டல் நிலம்
7. ஏதோமியனாகிய அதாது
8. நாற்பது ஆண்டுகள்.
9. அம்மோனிய நாட்டினனான நாமா
10. யோர்தானுக்கு அப்பாலுள்ள கெரீத்து ஓடையருகில்

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

போட்டியில் பங்குபற்றியோர் – 11 பேர்
சரியான விடையளித்தோர் – 04 பேர்

* S. **சதுஸ்க்கா,**
14/2 B, பாடசாலை வீதி,
கார்மேல் மாதாபுரம்,
சொறிக்கல்முனை - 01.

* D. **கிஷானிகா,**
21, பிள்ளையார் கோவில் வீதி,
பாண்டிருப்பு,
கல்முனை.

* **ராசலிங்கம் ஜெக்வின்,**
குமாரபுர வீதி,
புண்ணச்சோலை,
மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 164 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **விஜிதரா அபிஷேக்,**
பிரதான வீதி,
தேற்றாத்தீவு - 02.

**2ம் பரிசு - 300/=**

* **ரா. குளோரி,**
69 A, வட்டவிதானை வீதி,
கல்முனை - 02.

**3ம் பரிசு - 200/=**

* **ப. கெவின் கர்சாந்,**
13, பிரதான வீதி, சொறிக்கல்முனை

பங்குபற்றியோர் – 13

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**




ஒரு காட்டில் ஒரு பெரிய ஆலமரத்தின் அடியில் துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பார்வை கிடையாது.

அவ்வழியாக வந்த ஒருவன்,

"ஏ கிழவா, இந்த வழியாக சற்று முன் யாராவது சென்றார்களா?" என்று அதிகாரத் தோரணையில் கேட்டான்.

அதற்குத் துறவி,

"இதற்கு முன் இந்த வழியாக யாரும் சென்றதாகத் தெரியவில்லை" என்றார்.

சிறிது நேரத்தில் மற்றொருவன் அங்கே வந்து,

"ஐயா, இதற்கு முன் யாராவது இப்பக்கமாகச் சென்றார்களா?"

என்று கேட்டான். அதற்கு அத்துறவி,

"சற்று முன் இந்த வழியாகச் சென்ற ஒருவன் இதே கேள்வியைக் கேட்டு விட்டுச் சென்றான்" என்றார்.

மேலும் சிறிது நேரம் கழித்து இன்னொருவன் அங்கு வந்தான். அவன்

"துறவியாரே, வணங்குகிறேன். இதற்கு முன்பு இந்த வழியாக யாராவது செல்லும் சத்தம் தங்களுக்குக் கேட்டதா? தயவு செய்து கூறுங்கள்" என்று பணிவோடு கூறினான்.

உடனே துறவி,

"மன்னர் பெருமானே, வணக்கம். இந்த வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான். அடுத்து ஓர் அமைச்சர் சென்றார். இருவருமே நீங்கள் கேட்ட இதே கேள்வி யைத்தான் கேட்டனர்" என்றார்.

மிகவும் வியந்த அரசன்,

"துறவியாரே, தங்களுக்குப் பார்வை இல்லை. அப்படி இருந்தும் நான் அரசன் என்றும், முன்னால் சென்றவர்கள் வீரன், அமைச்சர் என்றும் எப்படி அறிந்தீர்கள்?" என்று கேட்டான்.

"அரசே, இதைக் கண்டறிய பார்வை தேவையில்லை. அவரவர் பேசுவதை வைத்தே அவர் யார், அவர் தகுதி என்ன என்பதை எல்லாம் அறிய முடியும். முதலில் வந்தவர் சிறிதும் மரியாதையின்றி கேள்வி கேட்டார். அடுத்து வந்தவர் பேச்சில் அதிகாரம் தொனித்தது. ஆனால் நீங்களோ மிகவும் பணிவாகப் பேசுகிறீர்கள்"

என்று விளக்கினார் அந்த பார்வையற்ற துறவி.

■■ முகநூல் பக்கத்திலிருந்து .....

தெய்வத்தின் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. 'தெய்வமே சரண்" என்று நம்பி எவன் தொழில் செய்கிறானோ, அவன் என்ன தொழில் செய்தபோதிலும் அது நிச்சயமாக பயன்பெறும். மனிதன் உள்ளத்தை தெய்வத்துக்கு பலியாகக் கொடுத்துவிட வேண்டும். அதுவே யாகம். அந்த யாகத்தை நடத்துவோருக்கு தெய்வம் வலிமை, விடுதலை, செல்வம், ஆயுள், புகழ் முதலிய எல்லாவிதமான மேன்மைகளும் கொடுக்கும். தன்னை மற: தெய்வத்தை நம்பு. எல்லா இன்பங்களையும் பெறுவாய். இது சத்தியம்.

*– மகாகவி பாரதியார் –*

■■■■

நாம் நூறு வயது வரை இந்த உலகில் வாழ்ந்து பணத்தை சேர்த்தாலும், உயிர் இந்த உடலை விட்டுப் போகும்போது ஒரு ரூபாய் கூட எடுத்துச்செல்ல முடியாது என்பது அனைவருமே அறிந்ததுதான். பெண்களோ, ஆண்களோ அணிந்துகொண்டு இருக்கின்ற அணிமணிகள், தீ இவ்வுடலைத் தீண்டுவதற்கு முன்னரே கழற்றப்பட்டு விடுகின்றன. உயர்தரப் பட்டுப்புடவை, வேட்டி முதலியனவும் வீட்டிலேயே அவிழ்க்கப்படுகின்றன. ஆகையால், நாம் சம்பாதிப்பதை நாமே எடுத்துப் போவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது நாம் சம்பாதிக்கும் பணத்தை வேறு பொருட்களாக மாற்றிவிட்டால், உயிர் உடலை விட்டுப் போகும்போது நம்முடன் கூடவே கொண்டு போகலாம். **வேறு பொருட்கள் என்றால் என்ன?** பணத்தை செலவழித்து பலவகையான புண்ணியங்களை மூட்டை கட்டி வைத்துக் கொண்டால், அந்தப் புண்ணிய மூட்டைகளை நம்முடன் கூடவே கொண்டு செல்லலாம்.

*– ஸ்ரீ அழகிய சிங்கர் –*

புனித ஜோசேவ்வாஸ் இறையியல் கல்லூரி, மட்டக்களப்பு மறைமாவட்டம்
கிறிஸ்தவ கற்கை நெறியில் முதலாவது டிப்ளோமா சான்றிதழைப் பெற்ற அனைவரையும் தொண்டன் வாழ்த்துகின்றது.



கிறிஸ்தவ ஒன்றிப்பு வார வழிபாடு 2022 - கோட்டைமுனை மெதடிஸ்த தேவாலயம்





பொன்விழா திருப்பலியும், முதன்நன்மை உறுதிப்பூசுதல் நிகழ்வும் - கருவேப்பங்கேணி





வெள்ளிவிழா திருப்பலியும், முதன்நன்மை உறுதிப்பூசுதல் நிகழ்வும் - விபுலானந்தபுரம்



